
# என் மாதாந்திர ஓய்வூதியம்!

சிறுகதைகள்



## இணுவில் பவா

# என் மாதாந்திர ஓய்வூதியம்!

*சிறுகதைகள்*



ஆக்கம்

## இணுவில் பவா


**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண்: 1447,
7 [ப.எண்: 4], தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலைபேசி: 24342926, 24346082
மின் அஞ்சல்: manimekalai1@dataone.in
இணைய தளம்: www.tamilvanan.com

# நூல் விவரம்



| | |
|---|---|
| நூல் தலைப்பு | என் மாதாந்திர ஓய்வூதியம்! |
| ஆசிரியர் | இணுவில் பவா |
| உரிமை | ஆசிரியருக்கு |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2012 |
| பதிப்பு விவரம் | முதற் பதிப்பு |
| தாளின் தன்மை | மேப்லித்தோ |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12 X 18 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 10.5 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | X + 90 = 100 |
| நூலின் இந்திய விலை | ₹ 50/– |
| அட்டைப்பட ஓவியம் | மிதுன் |
| லேசர் வடிவமைப்பு | ஸ்ரீ விக்னேஷ்வரா கிராஃபிக்ஸ்,<br>போன்: 98845 13164 |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆப்செட்,<br>செல்: 9551429203 |
| நூல் கட்டுமானம் | தையல் |

# உள்ளே




1. என் மாதாந்திர ஓய்வூதியம்! 1

2. உறவுகள் 10

3. காதல் சடுகுடு 21

4. நவயுகம் 29

5, புளியமரம் 38

6. உத்தர தரிசனம் 46

7. வினையால் ஒரு வெள்ளைப்புறா 54

8. பக்திப் பரிசு 61

9. கச்சான் ஆச்சி 68

10. பக்குவம் 79


***

# முன்னுரை



ஓர் எழுத்தாளனின் கதை வெற்றி பெறுவதற்கு அவனுக்கு பல்துறை சார்ந்த தொழில்களையும், அதன்நுட்பங்களையும், அத்துறை சார்ந்தோர் உபயோகிக்கும் சாதனங்களையும், அவர்கள் உரையாடும் போது உபயோகிக்கும் சொற்பதங்களையும், அவர்களின் மனக்குறைகள், எதிர்பார்ப்புகள், வளர்ச்சிகள் எனப் பற்பல விடயங்களைப் பற்றிய அறிவு பூரணமாக இருந்தால்தான் அவற்றைத்தான் எழுதும் கதையின் பாத்திரத்திற்கு ஏற்றவாறு உள்ளடக்கி கதை எழுதினால் அக்கதை நிச்சயமாக வாசகர்களின் மனத்தைத் தொட்டு வெற்றிபெறும்.

அந்தவகையில் நான் மதகுருவாக சேவைசெய்வதனால் பல்துறை சார்ந்தவர்களோடும் பழகுகின்ற வாய்ப்பினாலே அவர்களின் குறை நிறைகளை அறிந்ததனால் என் கற்பனைக் கதைகளுக்கு அவர்களின் நிஜச் சாயம் பூசி கதைகளை எழுதமுடிகிறது.

ஈழமணித் திருநாட்டிலே 1948ஆம் ஆண்டு நாட்டின் சுதந்திரத்திற்குப்பின் தமிழர்கள் எத்தனையோ வகையில் பாதிக்கப் பட்டார்கள். கடந்த மூன்று தசாப்தகாலமாக இன்னோரன்ன துன்பங்களை அனுபவித்தவர்கள், வாழ்க்கையே பிரச்சனையாகி, பிரச்சினையே வாழ்க்கையாகிய சமூகத்தை 'புளியமரம்', 'உத்தரதரிசனம்', 'வினையால் ஒரு வெண்புறா' என்ற கதைகளினாலே வாசகர்கள் உணர்ந்து கொள்வார்கள். இந்த சமூகப் பிரச்சினை

உலகத்தமிழரைச் சென்றடைய வேண்டும் என்பதனால்தான் வாழ்வியல் பிரச்சினைகளை முன்நிறுத்தி சிறுகதை மூலம் எழுதத் துணிந்தேன்.

இறைவனின் இணைப்பால் எழுத்துலகில் அவதாரம் எடுக்கும் சின்னக்குழந்தை நான். என் பிஞ்சுப் பாதங்கள் உங்கள் மனத்தளவில் கால் பதித்து தத்தித்தத்தி நடைபயில விரும்புகிறது.

அனுமதிப்பீர்களா?

உங்கள் இதயக் கதவைத் திறந்து என் உறவை இனிய வரவாக்கி என்னை உங்கள் வீட்டுப் பிள்ளையாக்கி என் சிந்தனைகளையும், குறும்புகளையும் விமர்சித்து என்னை ஒரு நல்ல எழுத்தாளனாக வளர்ப்பீர்களா?

தமிழ் உணர்வுகளோடு உறவுகளைத் தேடி மீண்டும் இணைவோம்.

உங்கள் விமர்சனங்களுக்கு,
என் மின்னஞ்சல் (E.mail) முகவரி
inuvilbava@gmail.com

**இணுவில் பவா**

# அணிந்துரை



இணுவில் பவா அவர்களுடைய 'என் மாதாந்திர ஒய்வூதியம்!' என்ற சிறுகதைத் தொகுப்பிற்கு அணிந்துரை வழங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இணுவில் பவா, 2002-2012 வரையான காலப் பகுதியில் எழுதிய பத்துக் கதைகளைத் தொகுதியாக்கி, 'என் மாதாந்திர ஒய்வூதியம்!' என எழுதியிருக்கிறார். நவீன இலக்கியம் இன்று புதிய திசைகளிலேயே பயணிக்கத் தொடங்கிவிட்டது. கவிதைகளில் பரிசோதனை நிகழ்ந்ததைப் போலவே சிறுகதைகளிலும் பரிசோதனைகள் இடம் பெற்று வருகின்றன. படைப்பாளி ஒருவன் தனது ஒவ்வொரு படைப்புக்களிலும் புதிய புதிய அவதாரங்கள் எடுத்து தனது அனுபவங்களையும், பிரச்சினைகளையும் உருவச் செழுமையுடன் ஆக்கித் தரும்போது படைப்புலகில் வெற்றி பெறுகின்றான்.

'என் மாதாந்திர ஒய்வூதிய'த்தில் அமைகின்ற சிறுகதைகள் இணுவில் பவாவின் அனுபவங்களையும், சிந்தனைகளாகவும், கற்பனைகளாகவும், உணர்வுகளாகவும் வெளிப்பட்டு நிற்கின்றன. மனதினுள்ளே ஊடுருவிச் சென்று அவற்றினூடே இழையோடி இருக்கும் உணர்வுகளுக்கு கதை என்ற வடிவம் கொடுக்க இவர் பெரிதும் முனைந்துள்ளார். இவருடைய கதைகளிலே வந்து போகின்ற கதை மாந்தர்கள் பல்வேறு நிலைகளில் எம்மைக் கவர்கின்றார்கள். குறித்த பாத்திரங்களோடு சேர்ந்து கோபப்படவும்,

பரிதாபப்படவும், அழவும், வியக்கவும் முடிகிறது என்றால் அது இவருடைய பாத்திரப் படைப்பின் ஒருவகை வெற்றி எனலாம்.

தமிழ் இன அடையாள அழிவுகளை சமூகத்தின் வெவ்வேறான எண்ணப் பாங்குகளை தனி மனிதரின் பல்வேறு உணர்வு நிலைகளை வெவ்வேறு கோணங்களில் இவருடைய கதைகள் காட்டி நிற்கின்றன. சமூகத்துடனான நெருக்கமான ஊடாட்டத்தை இவருடைய கதைகள் மெய்ப்பித்து நிற்கின்றன. இத்தொகுப்பில் வருகின்ற, 'புளிய மரம்' என்ற கதை சுந்தர இராமசாமியின் 'ஒரு புளிய மரத்தின் கதை' என்ற சிறுகதையினை நினைவூட்டுகின்றது. ஒரு புளிய மரத்தின் ஊடாக சமூகம் ஒன்றின் வரலாறு, அதன் எழுச்சி, வீழ்ச்சியோடு பதிவு செய்யப் பட்டதைப் போல, தமிழ் இனத்தின் மீதான அடக்குமுறையின் சாட்சியாக இணுவில் பவாவின் புளிய மரம் கிளை பரப்பி நிற்கின்றது. இத்தொகுப்பில் வருகின்ற 'கச்சான் ஆச்சி', 'காதல் சடுகுடு' முதலான கதைகள் சமூகத்தில் பெண்கள் தொடர்பான ஆசிரியரது நிலைப்பாடுகளைப் படம் பிடிப்பனவாக அமைந்து காணப்படுகின்றன. பொருளாதார நெருக்கடிகளால் மனிதன் அனுபவிக்கின்ற பிரச்சினைகளை 'உறவுகள்', 'என் மாதாந்திர ஒய்வூதியம்', 'உத்தர தரிசனம்' ஆகிய கதைகளில் பார்க்க முடிகின்றது. இவருடைய கதைகளில் சில, புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினையின் பல்வேறு பக்கங்களை அலசி நிற்கின்றன. தவிர அறிவியல் சார்ந்த புனைக்கதை முயற்சியிலும் இவர் ஈடுபட்டுள்ளமையை இவரது 'நவயுகம்' என்கின்ற சிறுகதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இணுவில் பவாவினுடைய கதைகள், சமூக மெய்மை, சமூகப் பிரச்சினைகள், சமூக அக்கறை என்ற தளங்களில் நின்று இலகு

மொழியின் ஊடாக நகர்ந்து படைப்பாளியின் உணர்வுகளை வாசகனிடத்து இடம் மாற்றுகின்ற முயற்சியில் வெற்றி பெற்றிருக்கின்றன.


தமிழ்ச் சிறுகதை உலகில் வெற்றி பெற்ற படைப்பாளர்களது சிறுகதைகளை இணுவில் பவா நுணுக்கமாகக் கற்க வேண்டும். சமகாலச் சிறுகதையின் புதிய திசைகளை பொருத்தமுற உள்ளீர்த்து சொற்செட்டான மொழியினூடாக இணுவில் பவா பயணிப்பாராக இருந்தால் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை உலகில் அவருக்கான இடத்தினை எவரும் மறுதலிக்க முடியாதென்றே நம்புகின்றேன்.

**பேராசிரியர் கி.விசாகரூபன்,**
பேராசிரியர் மற்றும் தலைவர்,
தமிழ்த் துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
இலங்கை.

■■■

# அணிந்துரை





தமிழர் என்னும் அடையாளத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு அவர் தம் மொழி, கல்வி, கலை, கலாச்சாரம், பண்பாடு என்பன பேணிப் பாதுகாக்கப்படவும், வளர்ச்சிபெறவும் வேண்டும்!

அந்த வகையில் கல்விக்கும், கலைக்கும், தெய்வீகத்திற்கும் ஒரு விருட்சமாக விளங்கும் இணுவையூரில் எல்லா கலைஞர்களினதும், எழுத்தாளர்களினதும் படைப்புக்களுக்கு ஊக்கமளித்து வெளி உலகுக்குக் கொண்டு செல்வதன் நோக்கமாக எமது இனத்துக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் அத்திவாரமாக அமைந்ததே 'இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையம்.'

இந்த நோக்கத்தினூடாகத்தான் எங்களுடைய மன்றத்தின் இரண்டாவது வெளியீடாக இணுவில்பவா ஐயா அவர்களுடைய சிறுகதைத் தொகுப்பாக 'என் மாதாந்திர ஓய்வூதியம்' என்னும் நூல் வெளியிடப்படுகிறது.

''அம்பிகையை சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்'' என்ற வாக்கிற்கேற்ப தெய்வீகப் பணிகள் அதிகமாக இருந்தும் குருக்கள் ஐயா அவர்கள் இந்தச் சிறுகதையை படைப்பதற்கு சிவகாமி அம்பிகையின் திருவருள் அவருக்குக் கிடைத்ததன் ஊடாக இதனை வெளியிடுவதற்கு எங்களுக்கும் திருவருள் கிடைத்திருக்கிறது என அடியேன் நினைக்கின்றேன்.

இந்தச் சிறுகதையை நூலுருவில் கொண்டு வருவதற்கு உறுதுணையாக இருந்த குருக்கள் ஐயா அவர்களுக்கும், எனது அன்புக்கும், மதிப்பிற்கும் உரிய மணிமேகலைப் பிரசுர நிர்வாக இயக்குநர் திரு. ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவிப்பதோடு இந்தச் சிறுகதை நூலுக்கு வாசக உள்ளங்கள் வரவேற்பளிக்க எல்லாம் வல்ல அம்பிகையை மனதார வேண்டுகின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க கலை!

**- வி.கே.குகானந்தன்**
தலைவர்,
இணுவையூர் ரசிகப்பிரியா சபா
கலைவளர்ச்சி மையம்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

■■■

1

# என் மாதாந்திர ஓய்வூதியம்

அமெரிக்கா லாஸ்ஏஞ்சலஸ் 2009ஆம் ஆண்டின் தொழிலதிபருக்கான விருது வழங்கும் விழா. தேவமனோகர் பணக்காரத் தோரணையில் கம்பீரமாக மேடையில் அமர்ந்திருக்கிறார். அருகில் ஜனாதிபதி மற்றும் பல பிரமுகர்கள் அரங்கமைப்பும் விருது விழா ஒழுங்கமைப்பும் மனக்கண்ணுக்கெட்டா வண்ணம் மச்சமாக இருந்தது. எது எப்படி இருப்பினும் தேவமனோகருக்கு இது வாழ்வின் உச்சாணியில் நிற்கும் ஓர் இன்ப அனுபவமே.

சேர்... இந்தாங்கோ, நோட்டீஸ் சேர்... சேர்... நோட்டீஸ் எங்கட பள்ளிக்கூட வருடாந்த விளையாட்டுப் போட்டி வாற சனிக்கிழமை. அதான் பிறின்சிப்பல் இதை உங்களிட்ட குடுக்கச் சொன்னவர். குசேலன் நீட்டிய நோட்டீசை உணர்வு மேலீட்டால் பெற்றுக் கொண்டவர் வாஞ்சிநாதர். வயது 63. ரிட்டயர் ரீச்சர். வாழ்வின் அடி மட்டத்திலிருந்து தன் விடாமுயற்சியால் முன்னுக்கு வந்து ஊரில் நண்மதிப்புள்ள உதாரண புருஷனாக வலம் வரும் கல்விமான்.

நோட்டீசைப் பார்த்தவருக்கு பள்ளிக்கூடத்தின் படிகள் மனத்தில் ஏற மனக்கூடத்தில் வகுப்பறை வடிவங்கள், நண்பர்கள் பிம்பங்களாக, சம்பவங்கள், சரம் போல தொடர நீர்த்துளிகள் விழித்திரை விளிம்பில் விழ அவரும் பழைய நினைவில் விழுந்தார்.

நீயும் வா தேவா, எதிர்காலம் நல்லாயிருக்கும்.

இல்ல இல்ல மச்சான். நான் உதுக்க வரேல்ல. ஏனோ மனது உதுல நாடேல்ல. நீ கம்பஸ் போ மச்சான். நான் பக்கத்தில இல்ல எண்டு றிவேட் அடிக்கிறேல்ல. கொனஸ்சோட பாஸ் பண்ண வேணும். நான் பக்கத்து ரியூட்டறியில கிளாஸ் குடுத்து, என்ர கல்வியை, அதிலை இன்னும் வளர்க்க வேணும். நீ ஒண்டுக்கும் யோசிக்காமல் போ மச்சான். தேவன் ஏனோ பிடிவாதமாக கம்பஸ் வர மறுத்தான்.

எனக்கு கம்பஸ்தான் கனவு, உலகு எல்லாமே. வீட்டிலும் எல்லாரும் கம்பஸ் போகச் சொல்ல நான் கம்பஸ்சில் பயணிக்க, தேவன் ரியூட்டரியில மாஸ்ரராக கால்பதித்தான். ஒரு வருடம் ஓடியது. மதில் எங்கும் வண்ணக்கலரில் வர்த்தகம் பிரபல ஆசிரியர் எஸ்.தேவா எனச் சுவரொட்டிகள். நான் கம்பஸ் கட்டு பெஞ்சில் குந்தியிருக்க தேவன் சந்திக்குச் சந்தி பேசப்பட்டான். நானும் பாராட்டலாம் எனச் சென்ற போது அவனே ஒரு ரியூட்டரியை எடுத்து நடத்துவதாகச் சொன்னான். கிளிநொச்சி, உருத்திரபுரம், கனகபுரம், முல்லை என அவனின் பெயரில் ரியூட்டரிகள் முளைத்தன. மூன்று வருடங்கள் முழுதாய் ஓடிவிட வன்னி எங்கும் தேவனின் ரியூட்டரிகள் தான். நான் ஸ்பெசல் செய்வதாக முடிவு செய்து மீண்டும் 1 வருடம் கம்பஸ்சில் காலம் கடத்தினேன்.

விநோத உடைப் போட்டியில் சிறார்கள் தங்கள் திறமைகளை அலங்காரத்தாலும், அசைவுகளாலும், ஆற்றல்மிகு பேச்சாலும் வெளிப்படுத்தினர். நானும் அதில் நடுவராக இருந்து முடிவு எடுக்க முடியாமல் திண்டாடினேன். திண்டாட்டமே என் சுபாவமா, இல்லை இல்லை. ஒவ்வொருவரிலும் ஒவ்வொரு திறமை. இருந்தாலும் சனங்களின் ஏகோபித்த தெரிவாக ஒருவர் மட்டுமே தெரிவாகும் போது தெரிவானவர் மிகமிகத் திறமைசாலி என்பது நிரூபணம்தானே. விளையாட்டுப் போட்டி முடிந்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. என்னையும் பரிசில் கொடுக்க அழைத்தார்கள். என்னை அறிமுகப்படுத்தும்போது எனது கல்வி, சுபாவம், பண்பு, அன்பு, சேவை எல்லாவற்றையும் முதன்மைப்படுத்தி என்னை ஒரு முன்மாதிரியாக, வழிகாட்டியாக, ஞானியாக, பள்ளி மாணவர்களுக்குச் சொன்னார்கள். உண்மையில் நான் ஒருவகை ஞானிதான்.

எனது சம்பளத்தில் மனைவியையும், மூன்று பிள்ளைகளையும் வாழவைத்து பிள்ளைகளை சமூகத்தில் அந்தஸ்துள்ளவர்களாக உருவாக்கி காலூன்ற வைப்பது என்பது எவ்வளவு கஸ்டம். முதுசம் எண்டும், சீதனம் எண்டும் ஒண்டும் இல்லாமல் ரியூசன் கொடுக்காமல் வேறு எந்த வழியிலும் பொருள் தேடாமல் ஓர் ஆசிரியராக வாழ முடியுமா! நான் வாழ்ந்தேன். ஞானியாகத்தான் வாழ்ந்தேன். என் சுகம், ஆசை, ஆரவாரம், எல்லாவற்றையும் என் குடும்பத்துக்காக தியாகம் செய்து இன்று அவர்களை ஒருவரும் குறைகுற்றம் சொல்லாவண்ணம் நல்ல ஒரு வாழ்வை அமைத்துக் கொடுத்திருக்கிறேன்.

சேர், இன்னும் 1/2 மணி நேரம் புரோக்கிறாம கொஞ்சம் இழுத்தால் தொழிலதிபர் தேவாவும் இதில கலந்து கொள்ளுவாராம். அவற்றை வைக்கிள் முருகண்டி தாண்டீட்டுதாம், அவர்தானே இந்த

மூன்று மாடிக் கட்டடமும் சயன்ஸ்லாப்பும் கட்டித் தந்தவர். அதான் சொல்லுறன. ஓம்...... ஓம்.... சரி, சரி ஆற்றையாவது ஸ்பீச் ஒண்ட வைச்சு சமாளிப்போம். சேர் அப்படி எண்டால் நம்மட வாஞ்சிநாதன் மாஸ்டர் நல்லாப் பேசுவார் அவரைப் பேசச் சொல்லுறன்...... ஓம்...... ஓம்... சரி, இப்போது எங்கள் பாடசாலை முன்னை நாள் ஆசிரியரும் சிறந்த ஆசானுமாகிய திருவாளர் வாஞ்சிநாதன் அவர்கள் சிறப்புரை ஆற்றுவார்கள்.......

நான் எழுந்து சென்று ஒலி வாங்கி முன்நின்று பேச ஆரம்பித்து 10 நிமிடம் சென்றிருக்கும்...............!!! சர்...சர்....சர்..... ஒன்றன் பின் ஒன்றாக ஏழு வாகனங்கள் கார், பிக்கப், இன்ரகூலர் என்று பல வண்டிகள் மைதானத்திற்கருகில் வந்து தரித்து நிற்க, பலரும் பல தினுசான உடையில் இறங்கிவர, கறுப்பு கூலிங் கிளாசும், ஆட்டுத்தாடியும் ஆல்டிமேட் அஜித் பாணியில் எனது தேவன் இறங்கிவர அனைவரும் அவனைச் சூழ்ந்து கொண்டனர். விளையாட்டு மைதானத்தில் கூடியிருந்த வீர, வீராங்கனைகள், மாணவர்கள். பெற்றோர்கள் பிரமுகர்கள் என அனைவர் கவனமும் என் தேவன்பால் செல்ல நான் பேச முடியாமல் திண்டாட, ஒருவர் என்னிடம் வந்து, சேர் அவர் வந்திட்டார், இனிப் பேசினது காணும் என்று மன்றாட என் பேச்சு இடை நடுவில் நின்றே போச்சு.....


கைகுலுக்கலும், சுகம் விசாரிப்புடனும் தேவன் மேடைக்கு வர நான் மேடையில் இருந்து இறங்கவும் சரியாக இருந்தது. என்னைக் கண்டவன் விழிகள் கறுப்புக் கண்ணாடியின் பின் விழித்துக் கொண்டன. ஆரத்தழுவி தன் அன்பை வெளிக்காட்டிக் கொண்டான். சபையோர் எல்லோரும் குளுக்கோஸ் உண்ட உற்சாகத்தில்........!

தேவன் புத்தகசாலை, தேவன் கபே, தேவன் பிறஸ், தேவன் காட்வெயர், தேவன் சிற்றி..... தேவன் தேவன் தேவன் இப்படிப் படிப்படியாக ஆரம்பித்து சகல துறைகளிலும் முன்னணியாகி அவன் வளர்ச்சி இந்த ஒரு வருடத்தில் இலங்கையின் வர்த்தகத் துறையில் அவன் ஒரு தூண் ஆகிவிட்டான். நான் படிப்பு முடித்து பட்டம் பெற்று அரச உத்தியோகத்திற்கு முன்னோடியாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் வேளைக்கே இணைந்து கொண்டேன். இடையிடை நானும் அவனும் சந்தித்துக் கொள்வோம். அவன் என் மீது வைத்த அன்பும், மரியாதையும் என்றுமே மாறவில்லை. அவன் என் வழியில் குறுக்கிடவுமில்லை. நான் அவன் பாதையில் தடை போடவுமில்லை. இருவருமே எமது இலட்சியக் கனவுக்காக உழைத்தோம். போராட்டங்கள், மறியல்கள், உண்ணா விரதங்களின் பின் எனக்கும் இன்னும் நாலாயிரம் பேருக்கும் அரச பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் கிடைத்தது. நான் திருகோணமலை சாஹிராக் கல்லூரியில் இணைந்து பணியாற்றினேன். அறிந்தவுடன் நிறைய பரிசுப் பொருட்களுடன் வீட்டுக்கு வந்து வாழ்த்தினான். அவன் தொழில் விவரம் விசாரித்தபோது தனது நிறுவனங்களிலும், தொழிற் சாலைகளிலும் நாலாயிரம் பேருக்கு மேல் வேலை செய்கிறார்கள் எனக் கூறினான். அவனும் அரசாங்கம் ஏதும் நடத்திறானோ என மனதுக்குள் நான் வினோதமாக எண்ணிக்கொண்டேன். பின்பு திருமணத்திற்கு வந்தான், பிள்ளைகளின் பிறந்த நாளுக்கு வந்தான். தொடர்புகள் தொடர்கதையாக நீண்ட எதிர்பார்ப்புடன் காலம் ஓடியது. அவனும் மந்திரி ஒருவரின் மகளை மணம் முடித்து இரு குழந்தைகளுடன் இன்பமாய் வாழ்கிறான்.

யூலை 83டன் நான் எமது ஊர்ப் பள்ளிக்கூடத்தில் இணைந்து கொண்டேன். ஊரில் என்னை தெரியாதவர்கள் யாருமே இல்லை. அந்தளவுக்கு எனது கல்வியும், பணியும், சேவையும்

விளங்கியது. தேவனை உலகே அறியும் அந்தளவுக்கு அவன் பொருளாதாரத்தின் உச்சத்தில் உயர்ந்து நிற்கிறான். இருவரின் கல்வியும், அறிவும், ஆற்றலும் ஒரே மாதிரியாக இருந்தாலும் தெரிவும், சந்தர்ப்பமும், சூழ்நிலையும் வேறாகியபோது நான் எங்கே! அவன் எங்கே!

இப்பொழுது சர்வதேச தொழிலதிபரும், சமூகத் தொண்டனும், எமது பாடசாலை முன்னாள் மாணவருமான பிரபல தொழிலதிபர் திருவாளர் சுப்ரா தேவமனோகர் அவர்கள் ஒருசில நிமிடங்கள் உரையாற்றுவார்கள்....... தேவன் தன் பழைய பள்ளிக்கூட வாழ்வைப் பற்றிப் பேசினான். வரிக்குவரி என் தோழமையையும், அன்பையும் நான் பாடசாலைக்கு ஆற்றிய சேவையையும் குறிப்பிட்டு என்னைப் புகழ்ந்தான். அரங்கம் அவன் பேச்சை அமைதியாக செவிமடுத்தது. எல்லோரும் அவன் வளர்ச்சியைக் கண்டு திகைத்தனர். அவன் என்னைப் புகழ்ந்து பாராட்டுகிறான் என்றால் அவன் என்னை விட பெரியவனா? அல்லது எல்லோருள்ளும் நான் பெரியவனா? பெரியவர், சிறியவர் அறிவிலா! அந்தஸ்திலா? நான் வாழ்வாதாரத்திற்கான கல்வியைப் பலருக்கு ஊட்டினேன். அவன் தன் தொழிற்சாலைகள் மூலம் பலரின் வாழ்வை அல்லவா ஓட்டிக் கொண்டிருக்கிறான். நிச்சயமாக அவன்தான் பெரியவன். நான் அவன் தோழன் என்பதில் பெருமைப்பட்டுக் கொள்கிறேன். இந்த விழாவுக்கும், பரிசுப் பொருட்களுக்குமான செலவை தான் பொறுப்பேற்கிறேன் என்றும், விரைவில் 20 கணனிகளையும் அதற்கான கட்டடத்தையும் அமைத்துத் தருவதாகவும் பேச்சின் இடையே சொன்னார். ஆம்..... ஆம்...... சொன்னார் என்பதே சரி. என்னதான் நண்பன் என்றாலும் பலர் முன்னிலையில் அவரின் அந்தஸ்துக்கு ஏற்றவாறு நான் நடக்க வேண்டும் அல்லவா! பேச்சு முடிந்ததும் என்னருகில் வந்து அமர்ந்து பழைய நினைவுகளையும், புதிய வளர்ச்சிகளையும் பகிர்ந்து



கொண்டார். மனைவி டிசைனிங் செய்யிறா, மூத்தவன்ர பேரில 3 கப்பல் ஓடுது, மற்றவன் 'சுக்கிரன்' என்ற பேரில் இன்சூரன்ஸ் கம்பனி நடத்திறான். ஆ.... ஆ... அப்பிடியே! என்ர மகளை அவுஸ்திரேலியாவில முடிச்சுக் கொடுத்திட்டன். மூத்தவன் கச்சேரியில ஒடிட்டர், இளையவன் சமுர்த்தியில வேலை செய்யிறான், என்னை மரியாதையாக வாஞ்சிநாத ஐயா என உயர்த்திக் கதைக்க முற்பட நான் தடுத்தேன்.

என்ன தேவா இது புதுப் பழக்கம்.......!

இல்ல.... இல்ல... இந்த வேட்டியும் நஷனலும், நரைத்த பஞ்சு முடியையும் பண்பையும் பார்த்தவுடன் உன்னோடு பழைய மாதிரிக் கதைக்க முடியேல்ல மச்சான்......!

நீ மச்சான் என்றாயே அது ஒன்றே போதுமடா தேவா......

வார்த்தைகள் ஒருமையில் உறவாட உணர்வுகள் சங்கமித்து நீண்டு கொண்டன.

அது சரி, என்னடாப்பா உன்ர கண் ஒருமாதிரி இருக்கு?

இப்பத்தான் ஒப்பரேசன் செய்தனான், இந்த மேடை லைட் வெளிச்சத்தில அது கலங்குதடாப்பா.

இந்தா இதைப் போடு என்று உரிமையுடன் தான் அணிந்திருந்த கூலிங்கிளாசை என்னிடம் தந்தான்.

மிகப் பெறுமதியோ? எவ்வளவு?

இது இஞ்ச எண்டால 12,500 ரூபாவரும். கலிபோனியாவில வாங்கியது. என்னட்ட இப்பிடி 10, 15 இருக்கு. நீ வைத்திரு........

வாங்கி அணிந்து கொண்டேன். உலகையே சற்று மறைத்தது. விலைகூடிய கண்ணாடியா அல்லது வீரியம் குன்றிய என் பார்வையா? என் உள்ளத்தில் பெரும் தடுமாற்றம். எனது மாதாந்த பென்ஷன் 12,500 ரூபா. நண்பன் வேளா வேளைக்கு அணியும் கண்ணாடியும் அப்படியா? எனக்கு பென்சன்தான் கண்ணாக வாழ்வுக்கு இப்போ வழிகாட்டுகிறது. தேவனுக்கு என்றால் என் பென்சன் பெறுமதிக்கு சமனான ஒரு கூலிங்கிளாஸ் ஒரு அழகிற்காக, அந்தஸ்திற்காக அவசியம் வேண்டியிராத ஒன்றாக அமைந்திருக்கிறதே.

■■■

# 2

# உறவுகள்

நீண்ட வராண்டாவில் நித்திரையில்லாமல் தவித்துத் தவித்து நடப்பதும் இருப்பதும் சாய்வதுமாக இருந்த நான் கண்ணயர்ந்த வேளை! அண்ணை.... அண்ணை... ஐயா... சார் உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு! சொன்ன நர்ஸ் தெய்வமானாள்.... உலகம் ஈர்ப்புவிசை தவறி ஓடிய உணர்வு! பட்டாம்பூச்சிகளின் பந்தியில் நான் முந்தி தேன் பருகினால்! எல்லாம் நல்லபடியா முடிஞ்சால் சரி, எப்ப வீட்டைவிடுவனமோ தெரியாது? எண்ணங்கள் பாய என் கை மொபைலில் எண்களைத் தட்டி அந்த இருட்டிலும் அந்த இனிய செய்தியைப் பந்தங்களோடு பகிர்ந்து கொண்டது.

கோசினி போல குழந்தையும் நல்ல நிறம், நல்ல முடி, மல்யுத்த வீரன் போல கைகளைப் பொத்தி கால்களால் உதையும் போது எல்லோருக்குமே ஆனந்தம். இரண்டு நாளில் துண்டு வெட்டி பறாளாயில் உள்ள எங்கள் வீட்டுக்கு வர ஆலத்தி எடுத்த அம்மாவுக்கு ஆண் பேரன் என்றவுடன் ஆணவம் அவளை ஆகாயத்துக்குத் தூக்க! வலது காலை தூக்கி வைத்து வாம்மா......

அதிகார ஆணையோ அன்பு வரவேற்போ! அணைத்த குழந்தையோடு அமைதியாக வீட்டுக்குள் நுழைந்தாள் கோசினி.

புதுவரவு வசந்தம் வீச எல்லோர் செயற்பாட்டிலும் ஓர் உத்வேகம். துடக்குக்கழிவு, பெயர் சூட்டல், கருமணி அணிவு, தொட்டில் பாட்டு என்று ஒரே அமர்க்களத்திற்குள்ளும் அமைதியாக இருந்தான் சங்கீர்த். ஆம், அதுதான் அவன் பெயர். எங்கள் தாத்தாவின் பெயர் சங்கரப்பிள்ளை. அதனால் சானா வரியில பெயர் வைக்க வேண்டும் - இது அப்பாவின் கட்டளை. வம்சம் பெருக ஒரு வழி பிறந்ததில் எல்லோரும் கூடிக் குதூகலிக்க வரலாறும், அரசியலும், சமயமும், சமூகமும், சரித்திரமும், சமகால நிகழ்வுகளும் சஞ்சரிக்க வீடு ஒரே அல்லோலகல்லோலப்பட்டது.

போண்டா ரீ..... போண்டா ரீ...... தெமிலி தெமிலி.... ரடகஜு".... அன்னாசி... பேர... அன்னாசி... பேர.... ஓ.....ஓ.... என்ர பேர் இராஜேஸ்வரன்... ஆ...ஆ... அட என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கோணர் சீற்றில் சுகமாக உறங்கியதில் மாகோவுக்கு ரயில் வந்ததும், அன்னாசி வியாபாரியும் பேர (கொய்யா) வியாபாரியும் சந்திக்க அண்ணாச்சிபேர் எண்டு எனக்கு விளங்கி நித்திரை கலைந்தது.... சிந்திக்கமுன் பெயர் சொன்னதும்...! இனி இஞ்ச இறங்கி மாறவேணும். இன்னும் 1.30 மணித்தியாலத்தால திருகோணமலை இரயில் வரும். அதுவரை கன்ரீன் றோலும் காமியின் வடையும் தான் எனக்கு தஞ்சம்.

அடிக்கடி வீட்டு நினைவு என்னை ஆட்டிப் படைத்தது. இந்த இருபத்தெட்டு வருடத்தில் இப்படி ஒரு நிலை வந்ததில்லை. சிறுபிள்ளையாக இருந்தபோது எங்கள் அப்பாவின் சொந்த பந்தங்கள் எல்லோருமாக கூட்டுக் குடும்பத்தில் செல்லக் குட்டியாக இருந்து பின் ஏழு வயது முதல் பதினைஞ்சு வயசு வரை என்

வயதுடைய உறவுகளுடன் கூடி விளையாடி மகிழ்ந்து, பதினாறு முதல் இருபத்துமூன்று வயது வரை நண்பர்களுடன் ஊர் சுற்றி உலகம் படித்ததும், பின் வேலையில் இணைந்த புது அனுபவப் பாடம், ஆர்வம், புது நண்பர்கள் என்று இப்பிடிப் போய் பேச்சுக்கால், கலப்பு, எழுத்து, கலியாணம் என்று நண்பியாக, ஆசானாக எனக்குக் கிடைத்த கோசினியின் இனிய தாம்பத்தியம் இப்போ...... சங்கீர்த்...... எல்லாத்தையும் விட்டு இனி வேலை... வேலை... வேலை.

என் எண்ண அசைவுக்கு மேலாக பிளாட்பாரம் அதிர்ந்தது... திருமலை ரயில் வண்டியில் ஏறிக்கொண்டேன். பயணக்களையில் கண்கள் செருகினாலும் என் கண்மணிகளை விட்டுவிட்டு வந்தது கண்ணில் நிழலாட மனத்திற்குக் கஷ்டமாக இருந்தது.

“கந்தளாய் பிரதேச சபை”, மும்மொழிகளிலும் நிமிர்ந்து நின்ற கட்டடம்தான் என் ஒபீஸ். இந்த நாலு வருசத்தில் என் சேவையைப் புகழாதோர் இல்லை. மூவின மக்களும் வாழும் இப்பிரதேசத்தில் எனக்கு வேலை செய்வது சிரமம். இருந்தும் இப்போ எல்லாம் பழகிவிட்டது. காதரின் கடைக்கு மேல்தான் என் ரூம். வீடு எடுத்து தங்க என் சம்பளம் இடம் தரவில்லை. காதர் கடை ரூம் அட்வான்சுக்குக் கூட சீதனக்காசுதான் கைகொடுத்தது. இந்த நிலையில் வீடு எப்படி எடுப்பது, கோசினி, சங்கீர்த்தை எப்படிப் பார்ப்பது....?

அலுவலகத்தில் எல்லோரும் என்னைப் பரிதாபமாகப் பார்த்தார்கள். இராஜேஸ் நீங்க ஊர் போய் வந்ததில் இருந்து மூஞ்சி சரியில்லை. என்ன ஆயீத்து செல்லீங்க.* உங்களுக்கு இன்னும் இரண்டு வருஷத்தால ரான்சர் வரும். அல்லா வழிவிடுவார். வொறிபண்ணாம வேலிய பாருங்க..... சக ஊழியர் ராபீக்கின் ஆறுதல் கூட என் காதில் விழவில்லை.... யோசனை...! யோசனை...!

* *ஆயீத்து செல்லீங்க - முஸ்லீம் மக்கள் பேசும் வார்த்தை*

இப்ப நல்லா உடம்பு சரிப்பான், இப்ப தவழுறான், பிடிச்சு நடப்பான், பல்லுக் கொளுக்கட்டை கொட்டினாங்கள். ஏதோ இலவச செய்திகளாக எஸ்எம்எஸ் போல வீட்டுத் தகவல்கள் மட்டும் வரும். ஒன்றிலும் கலந்து கொள்ளவுமில்லை, பார்க்கவும் இல்லை, அனுபவிக்கவும் இல்லை. பிறந்த நாளுக்கு மட்டும் போய் வந்தேன். சங்கீர்த்தின், குறும்பும், விளையாட்டும், வினையும், சுமையும், என் மனத்தளத்தில் ஆணியில் மாட்டிய சித்திரமாய் நிலைத்து விட்டது. அவன் பிஞ்சுப்பாதம் உதைத்த என் நெஞ்சைத் தடவினேன். மழலை மணம் வீசுவது போன்ற உணர்வால் என் கண்கள் பனித்தன.

ஏடு தொடக்கி இப்ப முன்பள்ளிக்கும் போறானாம் சங்கீர்த். எனக்கும் நீர்கொழும்புக்கு மாற்றம் வர அப்பீலுக்கு மேல் அப்பீல் போட்டும் ஒண்டும் சரிவராமல் அன்பே நீ அங்கே நான் இங்கே இன்பங் காண்பது எங்கே? எண்டு ஆறு வருடம் ஓடிப்போச்சு. சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் தரம் இரண்டு வகுப்பறையில் சங்கீர்த்தும் ஒரு மாணவனாக. மூன்று மாதத்திற்கு ஒருமுறை தான் 3, 4 நாள் லீவில் வீடு போய் வருவேன். அந்த வேளை அப்பா எனக்கு தேவையான சாமான்கள் வேண்ட கடை கடையாய் திரிய, அம்மா அதைப் பக்குவப்படுத்த, கோசினி அதை பைக் பண்ண, சங்கீர்த் பள்ளிக்கூடம், ரியூசன், நண்பர்கள் என்று திரிய, நான் வீட்டில் மாட்டிக்கொண்டு அடுத்த பயணத்துக்கு ஆய்த்தமாக..... எங்கே.... யாருடன் எப்படி, என்ன... கதைப்பது.....? தொழிற்சாலை போல வீடு இருந்தால் உறவு, பாசம், காதல், மோதல், இன்பம், துன்பம், சுகம் என்று எப்படி வரும்? எங்ஙனம் அனுபவிப்பது? என்னப்பா யோசனை? இரவு 8 மணிக்கு பஸ்சுக்கு புக் பண்ணியாச்சு. நாளைக்கு நேரத்துக்கு ஒபீஸ் போடுவியள். லீவு போட்டுடுவான்கள் என்று யோசிக்காதீங்கோ. கோசினிக்குக் கூட என் உணர்வுகள் சுடவில்லையா?

கொலசீப்பும் பாஸ் பண்ணிட்டான், அதோட செஸ்ரீமிலயும் எடுபட்டிருக்கிறான். அதுக்கு வார 11ஆம் திகதி விழா வைக்கினமாம். அதுக்கு வரச் சொல்லி ரெலிபோன். நான் போகத்தானே வேணும். எனக்கென்று உள்ள உறவு, என் இலட்சியம், கனவு எல்லாம் என் மகன்தானே. விழாவுக்குப் போய் கலந்து கொண்டேன். என்ன! பூரிப்பு எல்லோர் முன்னிலையிலும் சங்கீர்த் பாராட்டுப் பெற என்னால் கைதட்டி சந்தோசத்தை வெளிக்காட்ட முடியவில்லை. நான் கோசினியின் கைகளைப் பற்றிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தேன். என் வேலையை உதறிவிட்டு வீட்டாருடன் கூடி வாழத்தான் மனது தூண்டியது. என்ன செய்ய? எல்லாரின் பொருளாதாரச் சுரங்கம் நான்தானே.

பயணங்கள் நீண்டு பிரிவுகள் தொடர்ந்ததால் சங்கீர்த்திற்கு சகோதரபலன் இல்லாமலே போனது. இரண்டு வாரத்தில் மீண்டும் ஊர் திரும்பினேன். ஆம்! அப்பா போயிட்டார். உயிர் கொடுத்து, உலகைக் கற்றுத்தந்த அவரின் இழப்பை என்னால் தாங்க முடியவில்லை. ஊர்கூடி ஊர்வலமாக சுடுகாடு போய் எல்லாம் முடிய என் லீவும் முடிந்தது. வேலையில் மீண்டும் இணைந்தேன். ஓர் உயிர், உறவின் உணர்வு என்ன? எதிர்பார்ப்பு என்ன? நிலையில்லாத இந்த உலகில் எது நிலையானது? அன்புதானே. உறவுக்கு அத்திவாரம் அன்பு அருகிலிருந்தால்தானே பகரலாம். அண்டாட்டிக்காவிலும், ஆபிரிக்காவிலும் இருந்தாலும் அன்பு வைத்திருக்கலாம். ஆனால் அதன் வெளிப்பாட்டை, ஸ்பரிசத்தை, கனிவை அனுபவிக்க ஒருவருக்கொருவர் ஆறுதல் கூற அழைக்க கூடிவாழ வேண்டும். வெறும் வார்த்தையிலும், சடங்கிலும், அன்பு வாழ்ந்திடுமா? உறவுதான் நிலைத்திடுமா? அப்பாவின் தோற்றம், செயல், பேச்சு எல்லாம் என் ஆழ்மனதில் அமைதியாக உறங்க கடமையில் கண்ணானேன்.



சேவைக்காலத்தின் பிரகாரம் தரம் 2 நிலையில் பணிபுரிந்த நான் தரம் 1க்கு பதவி உயர்வும் சம்பள உயர்வும் பெற வானொலியில் இன்று நள்ளிரவுடன் பாண் 1 ரூபா 50 சதத்தாலும் பெற்றோல் மூன்று ரூபாவாலும் மற்றும் இறக்குமதி வரிகள் பதினைந்து வீதத்தாலும் உயர்வதாகச் செய்தி. பாடசாலைகளிலும் கல்வி மட்டும்தான் இலவசம். சப்பாத்து 1100 ரூபா, ரை 150 ரூபா, மொனிட்டர் பச் 100 ரூபா மற்றும் கொடி வாரம், நிறுவுனர் தினம், பரிசளிப்பு விழா, நவராத்திரி விழா, கலைவிழா, சுற்றுலா என்று ஏகப்பட்ட வருடாவருட நடைமுறைகளுக்கு ஓர் குடும்பஸ்தன்தானே கொடுக்க வேண்டும் பணம். ஓர் பிள்ளையுடன் எனக்கு இந்தப் பாடென்றால்.......!

அப்பன் ஏலாமக் கிடக்குது.... நீயும் எத்தின நாளைக்கு நிப்ப.... என்னப்பா பிறவேற்றா சனல் பண்ணிக் காட்டுவமே சரியா கஸ்ரப்பர்ரா. அம்மாவை விசேட வைத்திய நிபுணரிடம் காட்டி மருந்து மாத்திரைகளுடன் வீடு வந்து இரண்டு நாள் கூட இல்ல அம்மா எம்மை ஏமாற்றிவிட்டு ஆண்டவன் அடி சேர்ந்துவிட்டா. வாழ்வில் என்றும் இல்லாதவாறு அழுதேன்.......! எத்தனை பேர் எப்படி ஆறுதல் கூறினாலும் என் அம்மாவின் இழப்பை ஈடுசெய்ய முடியுமா? அம்மா வாழ்ந்த தியாகவாழ்வு, குடும்பத்தை வழிநடத்திய பாங்கு, அயலவர்களுடன் வைத்த நேசம், கோசினியும் கதிகலங்கி விட்டாள். என் மன வேதனைக்கும் அடுத்து என்ன செய்யப் போகின்றேன் என்ற என் கேள்விக்கும், தம்பி.....! இப்பிடி இருந்தால் ஒண்டும் நடக்காது, வா காடாத்த வேணும், நேரமாகுது இனி ஐயாவும் வந்திடுவார். பிள்ளை! வீட்டைக் கழுவுங்கோ, திருவடி நிலைக்குப் போகவானுக்கும் சொல்லியாச்சு. இரண்டு நாளக்க காட் அடிச்சாத்தான் சொந்த பந்தங்களுக்கெல்லாம் சொல்லி முடிக்கலாம். முப்பத்தொண்டுக்கும் இப்பவே ஆயத்தம் செய்ய வெளிக்கிட்டாத்

தான் சரி. நீயும் தனியாளில்லே. மன வேதனையில் உலகமே வெறுத்திருந்த எனக்கு இந்தக் கிரியை, சடங்கு, சம்பிரதாயங்கள் தான் என் துன்பத்தின் வடிகாலாக, பிராச்சித்தமாக நேசமாக அம்மா மீது வைத்த அன்பை ஆத்மார்த்தமாக வெளிக்காட்டும் சாதனங்களாக இருந்தன. சமயமும், சடங்கும் இல்லையென்றால் என் போன்றவர்கள் பைத்தியம் என்ற கட்டம் போகாத மனநோயாளி களாகவே இருப்பர், வாழ்வர். கலை, கலாச்சாரம், மரபு, வழிபாடு என்பன மனிதன் எக்கால கட்டத்திலும் கைக்கொள்ள வேண்டியனவே. அம்மாவின் வீட்டுக் கிருத்தியத்தை என்னால் இயன்ற தான தர்மங்களோடு செய்தேன். கோயில் தேர் திருவிழா போல ஒரே கூட்டம். எல்லாம் முடிய இப்போ கோயில்களில் இடம்பெறும் புராணப்படிப்புப் போல படிக்கட்டில் நான், ஹோலில் கோசினி, கேற்றடியில் சங்கீர்த் என்று மூன்று பேர் மட்டுமே.

சங்கீர்த் ஏஎல் பாஸ் பண்ணி இப்ப கம்பசும் போறான். கோசினிக்கு வீட்டு வேலைகளே உறவாகி விட்டது நிலை, கதவு, கண்ணாடி, அடுப்பு, ஆடு எல்லாம் அவள் வேலையின் ஆற்றாமையில் பேச்சு வாங்கின. வேலைப் பளுவுக்கும் வேதனைக்கும் ஜடப் பொருட்களே வடிகாலாக அமைந்து விட்டன. அவளின் நோக்கம் சிந்தனை, செயல் எல்லாமே சங்கீர்த் ஆனவுடன் நான் அவள் மனதில் காணமல் போய்விட்டேன். எனக்கு நான் செய்யும் வேலையே தஞ்சமாக. ஓர் உதாரணபுருஷனாக, சேவையாளனாக சமூகத்தில் எனக்குப் பாராட்டும், கௌரவமும் கூடி வந்தது. இவையெல்லாம் நிரந்தரமா? கூட்டம் கூடுவர், கொண்டாடுவர், கும்மாளமிடுவர், நாளை ஓர் கும்புடுவுடன் விலகிச் செல்வர்.

எனக்கும் பென்சன். அப்பா...! இனியெண்டாலும் வீட்டில ஆறுதலாய் இருங்கோ. எங்களுக்காய் உழையுங்கோ - இது

கோசினியின் அட்வைஸ். அப்ப இவ்வளவு நாளும் நான் உழைத்தது? பிரதேச சபையில் மக்கள் சேவைக்கு எனக்கு சம்பளம்தானே. அந்தச் சம்பளம் எனக்கு மட்டுமா? என் குடும்பத்துக்குத்தானே, இவளுக்கு மட்டும் ஏன் புரியவில்லை. உறவும் பரஸ்பர சம்பாசணையும் தடைப்பட்டு இடைவெளி நீண்டு விட்டதால் வந்த விபரீதமா இது?

'கம்பஸ் பாஸ்அவுட் பண்ணவும் சங்கீர்த்துக்கு கனடாவில சம்பந்தம் கைகூடி வந்தது. நாங்கள் ஸ்ரீலங்கா வரேலாது... மாப்பிள்ளை படித்திருந்தால் சரி, வேலையொண்டும் செய்யாட்டிக்கும் பரவாயில்லை. பிள்ளை இஞ்ச பார்மசியில வேலை செய்யிறாள், அவள் பொன்ஸரில எடுப்பாள், நீங்கள் மாப்பிள்ளைய அனுப்பினாச் சரி. பிறந்த நாளன்று என் மார்பில் உதைத்தவன் இன்று அவர்களுக்கு மாப்பிள்ளை உறவாக. எனக்கு அவன் மகன் உறவா? இல்லை வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் உள்ள உறவா? அவன் வளர்ச்சிக்கு என் பணம் தேவையாக இருந்தது. இனி வெளிநாடு போய் வட்டியோட அனுப்பலாம். ஆனால் பாசம், உணர்வு, ஆசை, ஏக்கம் இவைகளால் நான் பட்ட அவஸ்தைக்கு, துன்பத்திற்கு, பரிதவிப்புக்கு அந்தப் பணம் மருந்தாகுமா?

போயிங்-777 எமரைஸ் பிளேன் வானில் மறைந்தே விட்டது. ஆனால் நான் கையசைத்துக் கொண்டே இருந்தேன். எல்லோரும் என்னை ஒருமாதிரியாகப் பார்த்தார்கள். எனக்கு வெட்கமாகவும் இருந்தது. ஆனால் எல்லாத்தையும் மீறி ஏனோ என் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கோசினியின் மடியில் படுத்து அழ வேண்டும் போல இருந்தது. அது இப்ப முடியுமா? கலியாணம் செய்த புதிதில் என்ன அந்நியோன்னியம். இப்ப நாங்கள் பக்குவப்பட்டவர்கள், வயதானவர்கள். என்ன இப்பிடி மனிசியின்ட

மடியில படுக்குது இந்தாள் என்று சனங்கள் பார்வையாலேயே கொல்லுங்கள். எல்லாத்தையும் கட்டுப்படுத்திக் கொண்டேன்.

கோசினி அடிக்கடி இருமிக் கொண்டே இருந்தாள். கொண்டேக்காட்ட காசநோய் எண்டிச்சினம். ஏதோ அவளால இயன்றத சமைச்சுத் தருவாள். நானும் ஒத்தாசை செய்வன். எங்கள் தேவைகள் குறைந்து கொண்டே போனது. மாதம் ஒருமுறை பக்கத்து வீட்டுக்கு சங்கீர்த்தின் போன் வரும். அந்த நாள் எங்களுக்குத் திருவிழாதான். அந்த ஒரு நாளுக்காகவே மீதி நாள் வாழ்க்கை ஆனது.

பனி கடுமையாகக் கொட்டியது. உடல் நடுங்கி அனுங்கிக் கொண்டு இருந்தவள் அமைதியாக அடங்கிப் போனாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் அவளை எழுப்பிக் கொண்டே இருந்தேன். அவள் அசையவில்லை. விடிய தேத்தண்ணியும் கொண்டு போய் எழுப்பினேன். அவள் எழும்பவேயில்லை. எனக்குள்ளேயே பேசிக்கொள்கிறேன். தலையை அடிக்கடி சரித்துக் கொள்கிறேன். அடிக்கடி தண்ணீர் குடிக்கிறேன். கால் விரல்களை எண்ணிக் கணக்கிடுகிறேன். ஒன்றுமே புரியவில்லை. மூன்று நாளின் பின்தான் பக்கத்து வீட்டுத் தம்பி வந்து ஐயா உங்களுக்கு கனடா கோல், கோசம்மா எங்க? எட்டிப் பார்த்தவன் கத்திவிட்டான். ஊதிப்பெருத்து ஒரே நாற்றம் தலைமாட்டில் காலை மாலை என்று நான் வைத்த ஆறு தேத்தண்ணிக் கோப்பை நிறைய ஒரே நுள்ளான். ஊர் கூடியது. பொலிஸ் கூட வந்தது. என்னை ஏதோ எல்லாம் கேட்டார்கள். சங்கீர்த்துக்கு ரிக்கெட் இல்லை. வரேல்ல என்று என் காதருகில் வந்து கத்திச் சொன்னார்கள்.

நான் எனக்குள்ளேயே பேசிக் கொண்டேன். நான் இனிக் கதைக்க உறவு இருக்கா? தலையை அடிக்கடி சரித்துக்

கொண்டேன். இனி எனக்கு என்ன வேலை? தண்ணீர் அடிக்கடி குடித்துக் கொண்டேன். இனி இங்கு என்ன பற்று? கால்விரலை எண்ணினேன். நான் இருக்கும் உலகு விளங்கேல்ல! என்ற கையில கொள்ளிக்கட்டையைச் சேர்த்துப் பிடிச்சு யாரோ ஒரு ஊர்ப் பெரியவர் கோசினிக்குக் கொள்ளி வைத்தார். உறவு ஒன்று உலகில் இருக்கேக்க சடங்கு தேவையா இருந்திச்சு. இனி எதுக்குச் சடங்கு? சிதையில் பாயப்போன என்னைப் பல கரங்கள் தடுத்திச்சு. இது எல்லாம் உறவா? இல்லை சமூகக் கடமை மட்டுமே. ஆயிரம் ஔடதங்கள் அவனியில் இருந்தாலும் என் உறவின் பிரிவுக்கு அவை மருந்தாகுமா?

நீண்ட வராண்டாவில் நித்திரையில்லாமல் தவித்துத் தவித்து நடப்பதும் இருப்பதும் சாய்வதுமாக இருந்த நான் கண்ணயர்ந்த வேளை! அண்ணை.... அண்ணை.. ஐயா....ஐயா...! டொக்டர்....! இதுதான் புதுசா வந்த மெண்டல் பேசண்ட். சொன்ன நர்ஸ் தெய்வமானாள். உலகம் ஈர்ப்பு விசை தவறி ஓடிய உணர்வு. பட்டாம்பூச்சிகள் போல் நானும் கையை அசைத்துப் பறக்க முயற்சிக்கிறேன்.

■■■

3

# காதல் சடுகுடு

அவள் வாழ்க்கை நிஜங்களை வார்த்தைகளில் வடித்து வரிகளை நிரப்பிக் கொண்டிருந்தாள். அவளின் இரண்டாவது மகள் அவளிடம் சென்று என்ன மம்மி எழுதிறீங்க? எனக்கு உம்மாக்குடு! .......... கின்ர காடின்ல பட்டபிளை படம் கீறி கலர் பண்ணிக்கொண்டு வரச்சொல்லி மிஸ் சொன்னவ கீறித்தாறீங்களா மம்....! மழலை மொழி பேசும் அந்தச் சின்னவளின் வயது நாலு. படத்தைக் கீறிக் கொடுத்தவுடன் அவள் தாயின் கன்னத்தில் முத்தத்தை உதிர்த்துவிட்டு அவள் தன் அறைக்குப் போய்விட்டாள். அவள் தாயின் எண்ணங்கள் மட்டும் வண்ணத்துப் பூச்சியாகப் பறந்து வண்ணக்கனவுகளில் மிதந்தது.

அவள் பெயர் சுமித்ரா. வயது 34. அனைவரையும் சுண்டியிழுக்கும் மாநிறம். லாவகமான உடல் வாகு. சிறுவயது முதலே கண்ணாடி. நடிகை ரேவதியின் சாயல். கலகலப்பான சுபாவம். அவளின் பூர்வீகம் யாழ்ப்பாணம் வடமராட்சி கரணவாய். 92இல் கனடாவுக்கு வந்து கலியாணமும் கட்டி இப்ப இரண்டு பெண்பிள்ளைகள். இப்படித்தான் வாழவேண்டும் என்று வரன்முறையை இப்போதுதான் கற்று உணர்ந்து வாழ்கின்றாள். அவளின் முன்னைய

வாழ்வு எப்படியும் வாழலாம் என்ற பாங்கில் ஓடிய வசந்தக் கனவுகளில் மிதந்தாள்.

சுமித்ரா கரணவாய் கைஸ்கூல் 6ஆம் வகுப்பு மாணவி. நல்ல கெட்டிக்காரி. அவளின் தாய்மாமன் மூளாயில் வசித்து வந்தார். அவருக்கு மூன்று பெடியள். மூத்தவன் பாலன் வயது 18. பல விடயங்களிலும் ஆழ்ந்த அறிவும், எதையும் துணிவுடன் எதிர்கொள்ளும் வல்லமை இருந்தும் ஓ.எல் பெயில். ஊர்சுற்றித் திரிவான். இந்திய இராணுவத்தின் கெடுபிடியான 87ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாலனுக்குப் பாதுகாப்பு இல்லை என்று தகப்பன் அவனை கரணவாயில் தன் சகோதரி வீட்டில் கொஞ்சநாள் இருக்கட்டும் என்று அனுப்பிவைத்தார்.

பிள்ளை! என்னடி றோட்டையே பாக்கிறாய்? இண்டைக்கு பாலன் மச்சான் வருவான் எண்டில்லே மாமா சொன்னவர், அதான் பார்க்கிறன். பெட்டிக் கடை வைத்து குடும்பம் நடத்தும் கதிரேசனும் ராமாமிர்தமும் தான் அவளின் பெற்றோர். பாலன் இந்திய ஹீரோ சைக்கிளில் ஒரு ஹீரோ மாதிரியே வந்திறங்கினான். இருவர் பார்வைகளும் சந்தித்துக் கொண்டன. இருவருக்குள்ளும் தம்பதிகள் போன்ற எண்ணம், உரிமை, பாசம், பரிவு, காதல், நட்பு எல்லாம் ஒன்றுசேரப் பிரவகித்தது. பூர்வ ஜென்ம பந்தம் என்று நம்பி தம் இளவயது எண்ணங்களுக்கு வரையறையின்றி விருந்து கொடுத்தார்கள். அவள் இன்னம் பெரிசாகக்கூட இல்லை. ஆனால் அவள் உடலின் வனப்பு வசந்தம் தேடியது. போளை அடியும், கிட்டிப்புள்ளும், பற்மின்ரனும் அவர்கள் தினமும் விளையாடி மகிழ்வர். சுமி! உனக்கு என்னில விருப்பம் இல்லையா? விருப்பம்தான், ஆனால் பயமாயிருக்கு. ஏன் பயப்பிடுறாய் நீ என்ர சொந்த மச்சாள்தானே. காதல் என்று புரியாத ஒர் விருப்பத்துக்குள் இருவரும் கட்டுண்டது எல்லோருக்கும் தெரிந்து விட்டது.

கதிரேசனின் கைகள் பாலனின் கன்னங்களில் பதிந்தன. உந்த நாயை முதல்ல வீட்டை அனுப்பு. கொண்ணனும் இந்தப் பக்கம் வரக்கூடாது...... வார்த்தைகள் எல்லாம் வரம்பு மீறி வசையாக மாறியது. பிரச்சனை பெருத்தது. அவளும் பெரிசானாள். சடங்குக்கு மட்டும் தாய்மாமன் குடும்பம் வரட்டும் என்று சமாதானம் செய்யப்பட்டது. அதன் பின்பு பிரிவு நிரந்தரமானபோது பாலன் உணர்வுகள் பரிமளிக்க அவனின் பெற்றோர்களால் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் சமரசம் பேச முனைந்தனர். ஆனால் நடந்தது..... உவன் உதவாதவன், ஊதாரி, படிக்கவும் இல்லை, தொழிலும் இல்லை, பணமும் இல்லை, பிள்ளை உவனை நம்பினால் உன்ர வாழ்க்கை அவ்வளவுதான். இஞ்ச...... பிள்ளை.... அம்மா சொன்னாக் கேப்பாயில்ல...... தினம் தினம் உபதேசம். எறும்பு ஊர கற்குழிவது போல சுமியின் மனதிலும் மாற்றம்.

பெற்றோர்களின் முன்னிலையில் இருவரின் சந்திப்பும். என்னை மறந்திடு! உன்னில எனக்கு விருப்பம் இல்லை.... அப்ப இந்த மூன்று வருடமாப் பழகினது...... மௌனம் மௌனம் மௌனம்...... இந்த மௌனம் சம்மதத்தின் அறிகுறியா? இல்லவே இல்லை. பாவ மன்னிப்பின் மௌனம்..... ஆணின்' வீரம் எல்லாம் அரியணையில் மட்டும்தான். வாழ்க்கையில் அவன் கோழையாகி விட்டான்.


பாலன் நினைவு மாற வடிகாலாக வந்தவன் தான் கணேசதாஸ். கடைக்கு அடிக்கடி வந்து போனவனின் கடைக்கண் பார்வையில் மயங்கி காதலுற்றாள் அவள். பாடசாலையில் விளங்காத பாடங்களுக்கு விளக்கம் கொடுக்கும் தோரணையில் இருவரின் காதல் பாடமும் படிக்கப்பட்டது. எல்லாம் தெரிந்தும் கதிரேசனும் ராமாமிர்தமும் பேசாதிருந்தனர்.

கதிரேசனின் மகன் சங்கர் கனடாவில் இருந்து குடும்பத் தினரை கொழும்பு வந்தால் தான் கனடா கூப்பிடுவதாகச் சொல்ல, கதிரேசன் குடும்பம் செட்டித் தெருவில் சில காலம் செற்றிலானது. பொழுதுபோகாத சுமிக்கு போக்கிடம் சிங்களக் கிளாஸ்தான். பெரும்பான்மை இனத்தவனின் பெருமைப் பேச்சில் கணேசதாசனும் காணாமல் போனான். இப்போ அவள் உள்ளம் எல்லாம் சுனில்தான். இந்தக் காதல் கோல்பேஸ் கடலுக்கு மட்டுமே தெரிந்த காதல். யாருக்குமே சந்தேகம் இல்லை. சுனிலும் சுமித்திராவும் சிட்டுக் குருவிகள் என கொழும்பை வட்டமிட்டுத் திரிந்தனர், மகிழ்ந்தனர்.

மாற்றான் தோட்டத்து மல்லிகை மணம் வீச, சீ.... சீ.... இந்தப் பழம் புளித்துப்போனது. சுனிலின் ஒன்றரை வருடக் காதல் சுமித்திராவின் உள்ளத்தில் சுருண்டு சுமையானது. பாலன் மட்டும் இடைக்கிடை நினைவில் நிழலாடி நிஜமாக இதயத்தை உருக்கினான்.

பிள்ளை..! என்ன யோசிக்கிறாய்? கொஞ்ச நாளா உன்ர போக்கு சரியில்லை. ஏதோ கப்பல் கவுண்ட மாதிரியில்லே திரியிறாய். பிள்ளை! அண்ணன் எங்கள எப்பிடியும் கூப்புடுவான். நீ ஒன்றும் யோசியாதை. ஆ.... அட.... அண்ணன் சொன்னவன் உன்னை ரைவிங் பழகட்டாம். அங்க பழகிறதென்றால் காசு கூடவாம். இஞ்ச சும்மா இருக்கேக்க பழகிப் போடலாமாம். காசும் அனுப்பிறதென்று சொன்னவன். பிள்ளை கெதியாய் பழகிப் போட்டியென்டால் சுகம். எப்பிடியும் இன்னும் மூன்று மாதத்தில எங்களுக்கு விசா வந்திடும்.

நீங்க முதல்ல ஸ்ரெடியா இருங்க. அவசரம் கூடாது. நிதானம் தான் வேணும்...... லெப்டில தானே திருப்பச் சொன்னன். நீங்க என்ன ரைட்டில கட் பண்றீங்க.... ஸ்ரேங்கிங்கோடு அவளின் கையையும் பிடித்தவன் நிவாஸ். அந்த ஸ்பரிசம் அவளுக்கு



அன்னியமாகப் படவில்லை. அடுக்கடுக்கான வார்த்தையும், சந்திப்பும் நிவாசை அவர்கள் குடும்ப நண்பனாக்கியது. மொழிப்பிரச்சனையால் கொழும்பில் எங்கு சென்றாலும் நிவாசின் கார்தான் என்ற நிலையில் அவர்கள்.

அன்னியோன்யம் அரண் தாண்டி அவர்கள் அணைப்பில் அதிசய உலகம் கண்டனர். பத்தொன்பது வயது சுமித்திராவுக்கு சாரதியாக மட்டுமில்லாமல் வாழ்வின் சகல பாடங்களுக்கும் ஆசான் நிவாஸ்தான். ஒன்றரை வருட இன்பக் கனவை கனடா விசா கலைத்து விட்டது.

சுமி! நான் உம்மை துவா செய்ய விரும்புறன். உமக்கு விருப்பமா? இருதலைக் கொள்ளி எறும்பானாள் சுமி. அவள் மௌனம் இருவாரம் வரை நீண்டபோதுதான் அந்தச் செய்தி. நிவாசுக்கு முப்பது வயது, மீரிகமவில இரண்டு மனைவிகள், மூன்று பிள்ளைகள். அவன் மதம் பலதார மணத்திற்கு சம்மதித்தது. ஆனால் சுமியின் மனம் சம்மதிக்குமா!? அதிர்ச்சியின் அலைகள் அவள் மனதில் கவலை அலைகளாக.

பிள்ளை! என்னடி சுகமில்லையே? பேய் அறைஞ்ச மாதிரி இருக்கிற, நாளையிண்டைக்கு நைட் 12.30க்குப் பிளைற். எவ்வளவு சந்தோசப்பட வேணும்? நீ என்னென்டா...... ஒன்றும் அறியாத ராமாமிர்தம் அவளை விசித்திரமாகப் பார்த்தாள்.

புதிய இடம், புதிய சூழல், புதிய மனிதர்கள், புதிய கலாச்சாரம் எல்லாம் ஒன்றுசேர்ந்து அவளை ஓர் புதுமைப் பெண்ணாக மாற்றியது. கனடா போய் ஒரு வருடத்துக்குள் பழங்கள் பொதி செய்யும் ஒரு தொழிற்சாலையில் சேர்ந்து உழைத்தாள்.

வாழ்வின் வழித்தடங்கள் மெல்ல மெல்ல மறைய உலகின் ஓட்டத்துடன் அவளும் ஓடியபோது அவளுக்கு இருப்பத்திமூன்று வயது. அப்போதுதான் வாழ்க்கை என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என இனிய மலர்கள் அவள் இதயத்தில் மலர்ந்தன.

இஞ்சேரப்ப.... பெடியன் இஞ்செத்த சிற்றிசனாம். இவன் ஜெயக்குமாற்ற பெறாமேன் முறையாம். ஒரண்றியோ ஸ்றீட்டில சொந்தமாக் கடையும் நடத்திறானாம். இந்தா இதில படமும் கிடக்கு, பெட்டைக்குப் பிடிச்சா மேற்கொண்டு கதைக்கலாம்... கதிரேசனின் வார்த்தைகள் இந்தக் கடும் குளிரிலும் தெளிவாக வந்து ராமாமிர்தத்தின் செவிகளில் பாய்ந்தன.

சம்பந்தம் சம்மதமானது. சாஸ்திரங்களும், சம்பிரதாயங்களும் அயல் நாட்டிலும் அப்படியேதான், மாறவேயில்லை. வாழ்க்கையை நெறிப்படுத்தி வரன்முறையிட்டு வளப்படுத்துபவை சாஸ்திரங்கள் தானே. இல்லற வாழ்வில் இனிய நண்பனானான் முகேஸ் என்கின்ற முகேஸ்ராம். அமைதி, அடக்கம், ஆற்றல், ஆளுமை ஒன்றுசேர்ந்த அழகு சுந்தர புருஷனின் அணைப்பில் இரண்டு குழந்தைச் செல்வத்துடன் வாழ்வின் இன்பக் கடலில் மிதந்தாள் சுமி.

நல்லூர்
11.05.2006

*அன்பின் மாமா, மாமிக்கு நமஸ்காரம். முகேஸ் சுமி மற்றும் மருமக்களுக்கு நல் ஆசிகள். எல்லோரும் நலம். உங்கள் சுகங்கள் எப்படி? 28.05.2006 அன்று எனது இளைய மகனின் முதலாவது பிறந்த நாள். நீங்கள் ஒருவரும் அருகில் இல்லை என்று கவலைதான்.*

*இருந்தும் உங்கள் ஆசிகளும் வாழ்த்துக்களும் என்றென்றும் கிடைக்க எங்களை வாழ்த்தும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*இப்படிக்கு*

*அன்புள்ள, மருமகன் பாலன்-சாரதா*

நீண்ட கால இடைவெளிக்குப்பின் வந்த இந்தக் கடிதம் கதிரேசன் குடும்பத்தின் பாச உணர்வின் ஆழச் சுரங்கத்தில் நேசப் புயலைத் தோண்டி எடுத்தது..

எல்லோருக்கும் மகிழ்ச்சி. பாலனும் சாரதாவை மணம் புரிந்து மூன்று மகனும் இரண்டு பெண் பிள்ளைகளும் பெற்று ஓரளவு வசதியாக நல்லூரில் இருக்கிறான் என்றபோது சுமியின் மனதிலும் இனம் புரியாத ஒரு நெருடல். சீ.... பாவம், எவ்வளவு நல்லவன்.... அவனுக்கு நான் செய்த துரோகம் என்னை இந்தப் பதினேழு வருஷமா என்ன பாடு படுத்திச்சு. இப்போதும் அவனின் வேதனையில் யாருக்கும் பங்கில்லை. முகேசுக்கு ஒன்றுமே தெரியாது. எதைச் சொல்லுவது? எப்படிச் சொல்லுவது? ஆறு வருட தாம்பத்திய வாழ்க்கையின் அர்த்தம் அவள் தன் வாழ்க்கையில் பழைய சம்பவங்களைச் சொல்ல அவளை தரங்கெட்டவளாக்கி தரணியில் விடுமல்லவா? அது அவளுக்கு மட்டுமே தெரிந்த அறியாப் பருவ அவசர தீர்மானங்களின் அழுகைக் காட்சிகள்.

வரைவிலக்கணம் மீறிய தன், வாழ்க்கைப் பயணங்களை காட்சிகளாக அவள் வார்த்தையில் வடித்து வரிகளாக உங்களுக்குப் படிக்கத் தருகிறாள். படியுங்கள். ஆனால் முகேசிடம் பகராதீர்கள். தவறி வீழ்ந்த அவள் வாழ்க்கையைப் படித்து விட்டீர்களா? உங்கள் வாழ்க்கைப் படியில் பக்குவமாய் ஏறுங்கள்.

■■■

4

# நவயுகம்

ஓவ்....Z8 எனக்கு கொஞ்சம் வீக்காயிருக்கு. காட் பற்றி மாத்த வேணுமோ தெரியேல்லா. அட ஸ்ரொக்கும் இல்லை. ஓகே...ஓகே... ருமாறோ லாச்சப்பல்ல வாங்கலாம். G3 நீ லஞ்ச் ரபிலட் எடுத்தியா, எனக்கு சரியான பசியாக் கடக்கு. நான் எடுக்கிறன்........

மாத்திரையில் தான் இவர்கள் சாப்பாடு, அனைத்து இயக்கத்திற்கும் பற்றிகள்தான் பயன்பாடு. வசிப்பது (F) பிலையிங் றூம். அது தரையிலும் கடலிலும் வானிலும் லாவகமாக பிரயாணிக்கும். இப்போ பிரான்ஸ்சில் நிற்கிறது நாளை - ருமெனியா போகிறது. நாளைய தேதி 18-02-2240.

பிரான்சில்தான் இவர்கள் கோட்பிளையில் ரைக்ஸ் கட்ட வேண்டும். Z8க்குப் பணிக்கப்பட்ட வேலை இந்துமா சமுத்திரத்தில் எங்காவது ஒரு மீனாவது இருக்கிறதா என்ற ஆராய்ச்சிப்பணி. எப்போதும் தண்ணிக்குள் திரியும் அவன் ஒட்சிசன் முடிய 3, 4

மாதத்துக்குப் பிறகுதான் தரைக்கே வருவான். தனிமை, தனிமை, தனிமை, அவனுக்கு ஏதோ பழகிவிட்டது.

மிஸ்டர் G3யின் வேலை மழை பெய்விக்கிற ஒபீசில மாதத்தில் 6 நாட்கள் மட்டும ஒப்பிறேட்டர் வேலை. கெமிக்கல் கலப்பது, ஆவியாக்குவது, அதை சிலிண்டரில் பில் பண்ணி பிறகு அதை பிளேயிங் ரூமில் ஏற்றி வானில் விசிற வேணும். ஒரு மணிநேரம் மழை தொடர்ந்து பொழியும். 7 நிமிடம் முதல் 10 நிமிடம் வேலை கொஞ்சம் கஸ்டம்தான். ஆனால் ஒரு மக்கள் சேவையான பணி என்டபடியால் மனதில் கொஞ்சம் சந்தோஷம்.

இண்டைக்கு பி.எம் மலெசியா செரவாக் போக வேணும். அங்கதான் அவர்களின் தந்தை MODT-2 வின் பொடியை பதப்படுத்தி சமாதி வைத்திருக்கிறார்கள். அந்தாளும் 203 வருஷம் வாழ்ந்து போன வருஷம்தான் மூளையில் பொருத்தின றிமெப்பறிங் சேக்கிற் I.C திடீரெண்டு பியூஸ் போய் டெத்தாயிட்டார். இரவு 12.00 மணிக்கு பிறேயர் பண்ண 198 வயது சித்தப்பாவான P.A 013 யும் கியூபாவில இருந்து வாறதெண்டு போன வருஷமே என்ர சட்டலைட் கிஸ்ரி டயரியில மெசேச் போட்டவர்.

எங்கட மம்மி EOH + 4 வரமாட்டா. அவா 13 வது கலியாணம் கட்டி இப்ப பேர்த்தில பாக்கிங்கில நிற்கிறா எண்டு என்ர கதிர்வீச்சு கடிகாரம் - அலாம் பண்ணினது. அவ எப்பிடிப் போனாலும் அவ எங்கட அம்மாதானே.

ருமேனியா அழகாய் இருந்தது. கடைகள் எங்கும் நகம் வளராமல் இருக்க சிறந்த கிறீம் NNOT" P கிறீம் எண்டு விளம்பரப் பலகைதான். இரண்டு நாள் பாக்கிங் முடித்து இன்றிரவு கனடா பயணம் போனோம். நயாகராவில் ஒரே கூட்டம். கடந்த எட்டு

நாளில் இதுவரை 4 ரொப் தண்ணீர் வீழ்ந்தது என்று விளம்பர ஸ்கிறீனில் விரிவான விளக்கமும் பிரதியாக்க வீடியோ அஞ்சலும் ஓடிக் கொண்டிருந்தது. எங்கோ மெட்டி ஒலி ஓ... ஓ... இந்த சனத்துக்க எங்க தமிழ்ச் சனமும் ஒண்டு நிக்குது போல.

ஏய்... ஏய் Z8 பெயின் றிமூவ் எடு..... எடு என்ர முள்ளந்தண்டு வலிக்குது உடனபிடி. 3 நாளா நித்திரையே கொள்ளேல்ல. இண்டைக்கு ஒரு 35 நிமிசமெண்டலும் ரெஸ்ட் எடுக்க வேணும் எண்டு என்ர பொடி ஹெல்த்சூஸ்ரர் எலாம் பண்ணினத நான் மறந்து போனன் எண்டு என்ர பிளாற்றினப் பற்கள் நாக்கோடு சப்புக் கொட்டிக் கொண்டன.


இப்ப எங்கட பிளையிங் றூம் இங்கிலீஸ் கால்வாயில் போய்க் கொண்டிருந்தது. ராடர் ஸ்கிறீனில திருப்பதி யானை ஒரு செக்கன் பார்த்துக் கும்பிட்டன். இப்ப திருப்பதி கைவேக்கும் பவுண் தகடு பதிக்கிறாங்களாம், ஒரு மாதத்தில சராசரியாய் 3 பேர் மட்டும் தரிசனத்து வருகினமாம்.

பிறேக் பெஸ்ட் ரபிலட் ஒண்டு போட்டன். இப்ப அதின்ர டிசைனையும் சைசையம் மாத்திப் போட்டாங்கள். ஆனால் அதில 185 நிமிசத்துக்குப் பசியிருக்காது எண்டும் 15-10-2360 எக்ஸ்பரி டேட்டும் இருந்தது. பசுபிக்சீயில 10 நாள் பாக்கிங் போடலாம் எண்டு முடிவு பண்ணி வேஸ்ட் சீ கொன்ரோல் ஒபீசில என்ரிபாசும் நெட்டில எடுத்திட்டோம். இருந்தாலும் எமர்ஜென்சி மெசேஜ் ஒன்று வந்தது. மாலைதீவு, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், ஹவாய், பியூறி, ஐஸ்லண்ட் என்ற நாடுகள் காணாமல் போன 159ஆவது ஆண்டு நிறைவு நாள் பிரார்த்தனையில எல்லா நாட்டு பிரசின்டனும் இன்னும் 9 நிமிசத்தில பசுபிக்சீயில கூடுகினமாம். இன்னும் 20 நிமிசத்துக்கு வெளியாட்கள் கடல்ல போகேலாதாம்.

பத்து நாள் எப்படிப் போனது என்று தெரியவில்லை. அடிக்கடி மூனில செட்டிலான BSP-6 மச்சான் F.M. சனல்ல கதைப்பான். நாளையிண்டைக்கு 5.36 P.M முதல் 7.58 வரை தங்களுக்கு பவர் கட்டாம். ஏணென்டால் அப்ப சந்திரகிரகணம் எண்டும் சொன்னான். அங்க பிளையிங் றூம் பாவிக்கேலாதாம். சொந்தமான நிலம் வாங்கித்தான் இருக்க வேணுமாம். வருஷத்தில ஒரு திருவிழா மட்டும்தான் நடக்குமாம். அதுதான் ஏதோ புண்ணிய தடவிழாவாம். என்னெண்டு விசாரிக்க அதுதாண் நீல்ஆம்ஸ்ரோங் 1969 ஜூலை 20 திகதி முதன் முதல் கால் பதித்த நாள். ஏதோ வாழ்க்கை போகுது எண்டு அலுத்துக் கொண்டான்.

அங்கிருந்து (F) பிலை பண்ணி ரஷ்யா, மெங்கோலியாவுக்குப் போனோம். ஏதொ அருங்காட்சியகமென்டு சனமெல்லாம் அள்ளுப்பட்டுதுகள். நாங்களும் போய்ப் பார்த்தோம். அது முந்தி மனிதர்களுக்கு முடி எண்டு சொல்லி ஏதோ தலையில முளைக்கு மாம். அதிலும் ஆம்பிளைகளுக்கு முகத்திலையும் வளர்ந்து பெரிசாத் தொங்குமாம். அதை சீர் செய்யிறத்துக்கு சலூன் எண்ட பெயரில உள்ளது. தான் அது என்டு கைடு விளக்கம் தந்தான். அங்க சனங்கள் உடுப்பு அதுக்கு மேல எங்களப்போல நொன் அக்ஸிடன் பர்முலா கோட்டும் போடாமல் நிர்வாணமாக திரிஞ்சது அதிசயமாக இருந்திச்சு.

Z8... Z8.... ராடர்ல கிறீன் சிக்னல் பீப் பண்ணுது. என்னன்டு பார். X....X.. G3 V... நீ சென்னையில எடுத்த அதிஸ்டலாபச் சீட்டுக்கு 20-12-2242 ல செவ்வாய்க் கோளுக்குச் சுற்றுப் பயணம் போக சான்ஸ் கிடைச்சிருக்கு. ஹப்பி ஹப்பி ஹப்பி ஜேனி. நானும் ராடரில் பார்த்தேன். மகிழ்ச்சி தாளவில்லை. அத்தோடு பக்கத்தில் விலத்திச் சென்ற பிளையிங் றூம் (00EXPO-3) ராடரில்



பதிந்தது. அதில் 103 வயதிருக்கும் அழகான கன்னி என் கண்களைப் பறித்தாள். எனக்கும் 116 வயதாகிவிட்டது. ஒரு 40 நிமிடமென்றாலும் அவளோட குடும்பம் நடத்த மனம் துடிக்குது.

G3 ஏதாவது உணர்ச்சிவந்தால் பிறவுண் சுகர் ரபிலட்டும், நெத்தலின் கப்சூலும் எடுப்பான். எனக்கு அதில் நாட்டமில்லை. நிஜமான உணர்வும் பாசமும் அனுபவித்தால்தானே தெரியும்.

ராடரில் வேள்ல்ட் F.M நியுஸ் போய்க் கொண்டிருந்தது. இலங்கையில் பிரிவினைவாதிகளுக்கு எதிரா அரசு இராணுவத்தில் இன்னும் ரெண்டு கோடியே 60 லட்சம் குளோனிக் இராணுவ வீரர்களை உற்பத்தி செய்யவுள்ளது. மகாத்மா காந்தியின் மூக்குக் கண்ணாடி இன்று முதல் உலகிலுள்ள 686 நாடுகளுக்கும் சுற்றுப் பயணமாக எடுத்து வரப்படவுள்ளது.

அவுஸ்திரேலியாவில் இம்முறை இடம்பெறவுள்ள வேள்ல்ட் கப் கிறிக்கெட் போட்டியில கொள் முதலான டிக்கெற்கள் குலுக்கல் மூலம் அதிஷ்டம் பார்த்து முதல் பரிசாக ஒரு பிளையிங் றூமும் அதற்கான 30 வருஷ சேவிஸ்சும் இலவசமாக வழங்கப்படும்.

சவுத் ஆபிரிக்க காட்டில் யானை என்கின்ற மிருகத்தின் வெண்மையான நீண்ட உறுப்புப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த விலங்கு 200 வருடங்களுக்கு முன் இப்பகுதியில் செறிவாக வாழந்திருக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சினிமா நிறுவனமான A.V.M, V.M.S, M.S.J, S.J.P என்பவற்றில் கடந்த 200 வருடங்களாக நெடுந்தொடராக ஒளிபரப்பான வைர நெஞ்சம் என்னும் மெகா தொடர் நாடகம் தற்போது J.P.C இயக்கத்திலும் 30 வருடங்களாக நெடுந்தொடராக ஒளிபரப்பப்படுவது கின்னஸ் புத்தகத்தில் உலக சாதனை நெடுந்தொடராகப் பதிவாகியுள்ளது.

குழந்தை பிறந்து 24 மணித்தியாலத்துக்குள் செலுத்தக்கூடிய வகையிலான எயிட்ஸ் தடுப்பு மருந்தை அமெரிக்கா சந்தைப் படுத்தியுள்ளது. இதன் மூலம் எயிட்ஸ் இல்லாத மனித சமூகம் உருவாகும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மனித சமூகம் எண்டு சொல்லிச்சினம். சமூகமெண்டால் என்ன? ஒருவனாக இருப்பவன் குடும்பமாக, உற்றார், சுற்றத்தார், ஊர், பிரதேசம், நாடு என்று வாழும்போதுதானே சமூகம். இப்ப எங்க அப்படி? ஒவ்வொருவரும் தனித்தனியப் பறந்து திரியிறாங்கள். இப்போது மனித சமூகம் எண்டு சொல்ல முடியுமா? என்ன இருந்தாலும் நான் தமிழன் எண்டபடியால் அண்ணனோட அடிக்கடி சந்திச்சு கதைச்சு உலாவித்திரியிறன். இன்னும் 65 மணித்தியாலம் தான் எனக்கு லீவு. திருப்பி இந்துமா சமுத்திரத்துக்குள்ள இறங்க வேணும். எங்காவது மியூசியத்துக்குப் போவோம் எண்டு நினைச்ச போது லண்டன் மியூசியம்தான் ஞாபகத்துக்கு வந்தது. மெக்சிக்கோவில் இருந்து யு.கே.க்குப் போய் தேம்ஸ் நதியில பிளேங் றூமை இறக்கி மியூசியத்தைப் பார்த்தோம்.

இது..... காஸ் அடுப்பு..... இது பிளேன்... இது.......... கைத் தொலைபேசி, ......மோட்டர் சைக்கிள், பேனா, புத்தகம், கயிறு, கொம்யூட்டர், சிகரெட், சீப்பு, சவள், எண்டு எங்கட சனம் 350 வருஷத்துக்கு முன்னம் பாவிச்ச பொருட்கள் எண்ட பிரிவில வைச்சிருந்திச்சு. எனக்கும், அண்ணாவுக்கும் ஒரே ஆச்சரியம். சரியான மகிழ்ச்சி. அடுத்த புளக்கில புகைப்படப் பிரிவு எண்டு இருந்திச்சு. அதில 3ஆவது உலக மகாயுத்தக் காட்சி, சீனப் பெருஞ்சுவர், ஆகாய கடல்வெளிச் சமர் வெற்றிவிழா, எட்டுக்கையுடன் பிறந்த குழந்தை, உலகின் மிகமிகச் சிறிய கோபுரமான C.N.N டவர், இலங்கை மலையக உடுவற எஸ்டேட்டில்

தேயிலைக் கொழுந்து பறிக்கும் பெண்கள், பிடல் காஸ்ரோ, நடிகர் ஜாக்கிசான், இப்படி உலகின் உன்னதமான நிகழ்வுகளினதும், வரலாற்று மனிதர் களதும் படங்களோடு இங்கிலாந்தின் தற்போதைய இளவரசியான சின்சுகியின் படமும் இருந்தது.

என் அருகில் ஆவலோடு படங்களைப் பார்த்த ஒரு வெள்ளைக்கார நண்பரைக் கேட்டேன், சின்சுகியின் வரலாற்றைச் சொல்ல முடியுமா? என்று. அவர் சொன்னார். இங்கிலாந்தில் குடியேறிய ஈழத் தமிழர்களின் ஏழாவது தலைமுறையில் உதித்த வராம் இந்த சின்சுகி. இவரின் முன்னோரில் ஒருவர் ஈழத்திலிருந்து வந்து இங்கிலாந்து ராணியோட சம்பந்தம் வைச்சதாலதானாம் அந்த கௌரவமாம். அவவின்ர பேர் சின்னத்தம்பி சுகிர்தாவாம். ஆனால் சின்சுகியென்டால்தான் உலகறியுமாம். நல்ல பண்பாளராம். லண்டனில கின்ர காடின் முதல் கம்பஸ் வரை இங்கிலீசையும் இரண்டாவது மொழியாக ஏற்றுக் கொள்ளலாம் எண்டு பரிந்துரைச்சவாவாம். ஆனால் இன்னும் ஐக்கிய ராச்சியத்தை ஆளும் தமிழ் பிரபுக்கள் சபை அங்கீகரிக்கேல்லை எண்டு ஒரு பெரிய கிஸ்ரோறியே சொன்னார். அன்பாக விடைபெற்று அடுத்த புளக்கிற்குள் போனோம். அங்கே, உலகிலுள்ள 686 நாடுகளின் வரைபடங்கள், அமைவிடங்கள், வரலாறுகள், மொழி, கலை, கலாச்சாரங்கள், தலைவர்கள், போன்ற பலவும் காணப்பட்டன. அதில் 2000 ஆண்டளவில் அதிகம் பேசப்பட்ட மொழியான "மாண்டரின்" என்னும் மொழியை தற்போது நால்வரால் மட்டுமே பேச முடியுமாம். நந்திக் கொடியோடு ஐரோப்பாவில் மட்டும் தமிழர்கள் 6 நாடுகளில் ஆட்சி புரிகிறார்களாம். சுவஸ்திக் இலச்சனை பொறிக்கப்பட்ட அவர்களின் பணமான "சுவஸ்திக்" பணப் புழக்கத்திலும், பெறுமதியிலும் 2ஆவது இடம் பிடித்துள்ளது என்ற விபரமும் இருந்தது.

அடுத்த புளக்கிற்குள் சென்றோம். முட்டைக்குள் பிள்ளையார், அரிசியல் சாயிபாபா, கண்ணாடிக் கிளாசுக்குள் கீதோபதேசக் காட்சி எண்ட பல தினுசில வரைகலையின் சிறப்பையும், வினோதமான முறையையும் பேணியிருந்தார்கள். அந்தக் காலத்தில எங்கட ஆக்கள் எவ்வளவு நேரம் செலவழிச்சு இப்பிடி கலைகளை வளர்த்திச்சினம், இப்ப எண்டால் முடியுமோ?

என் கதிர்வீச்சுக் கடிகாரம் என் லீவு முடியுதெண்டு பீப் பண்ணுது. நான் என்ன பண்ணுறது. நான் இனி இந்து சமுத்திரத்துக்க இறங்கப் போறன். நீங்களும் இந்த நவயுகத்தில மூழ்கியிருப்பியள். ஒருக்கா உங்கள கிள்ளிக் கொள்ளுங்கோ.. நீங்கள் இருப்பது கலியுகம். OK பாய்....

■■■

# 5

# புளியமரம்

அப்பா இன்னும் திறக்கேல்லை! ஆ...ஆ, பத்தரை மணியாகுமோ தெரியாது! கெதியா இஞ்சால வந்.............. அட கட்டாப் போச்சு!

இண்டையோட மூன்று முறை வந்தாச்சு, ஒன்டுமாறி ஒன்டில சைன் பண்ணிப்பண்ணி, போட்டோக் கொப்பி எடுத்து விதானை, ஏஜிஏ ஒபீஸ், ஏரியாக் காம் பட்டாலியன் பிரிவு, சிவில் ஒபீஸ், பிரிகேட் இப்பிடியே திரிஞ்சு திரிஞ்சு எல்லாம் எடுத்துக் குடுத்துட்டு இன்னும் அலையிறம் இன்டைக்கிண்டாலும் கிடைக்குமோ தெரியாது.

மல்லி! ஏ.... ஏ மல்லி! எண்ட கோ.... ஒயாட்ட நம பிரதீப் நே! ஓம் சேர், நீங்கசரி பாவம் தானே.... ரெம்ப.... ரெம்ப நாள் வந்து..... வந்து போய் ஒயா நம்பர கியன்ன....!

முருகா, இண்டைக்கின்டாலும் சரிவரவேணும், எனது அலைச்சல் அந்த காக்கிச் சட்டைக்காரன் மனதில் எங்கோ

கசிந்திருக்க வேணும். உடனேயே எனது கிளியரன்ஸ் துண்டைக் கொண்டு வந்து தந்தார். எனக்கு லொத்தரில் பரிசு விழுந்த மகிழ்ச்சி. எல்லையற்ற மகிழ்ச்சி எல்லாம் எண்ணிக்கட்டி எல்லைக்குள் வைக்கப்பட்ட சூழல் யாழ் குடாவில்! நான் பிரதீப், வயது 19, அப்பா சுவிஸ் போய் 16 வருஷம் அம்மாவோட உடுவில்ல இருக்கிறன். சுவிஸ்சுக்குப் போறத்துக்காக கிளியறன்ஸ்சுக்கு சுன்னாகம் சிவில் ஒபீசுக்கு முன் உள்ள புளிய மர நிழலில் இருந்துதான் சுவிஸ்சில் இருக்கிற என்ர அப்பாவுக்கு...........

மகனோட கதைச்சு இடையில் போன் துண்டிக்கப்பட்டதால் மகேஸ்வரநாதன் மனக் குழப்பத்தால் அந்த நான்கு சுவருக்குள்ளும் நாலு தரம் சுற்றிச் சுற்றி வந்தார். இன்னும் மனம் ஆறவில்லை. கொட்வோட்டர் கொஞ்சம் எடுத்திட்டு சோபாவில் அமர்ந்தார். மகனின் குரலில் தெரிந்த ஆதங்கம் அவரின் வாழ்வில் நடந்த சம்பவங்களைத் தொடுத்து சரங்களாய்த் தொங்கிய நிகழ்வின் வடிவில்.

பதினாறு வருஷத்துக்கு முதல்லயும் இப்படித்தானே அந்த சுன்னாகம் சிவில் ஒபீஸ் புளியமரத்துக்கு கீழே கிளியரன்சுக்காக காத்திருந்த நினைவுகள். காலம் தன் கடமையில் கண்ணாய் இருக்கிறது. கரணம் தப்பினால் மரணம் என்ற வாழ்க்கை இலங்கை யில் *சீ... சீ...* என்ன இது மானிட ஜன்மம்..... மனிதபிமானம்? இந்தியாவும் செவ்வாய்க் கிரகத்துக்கு ரொக்கற் அனுப்பிப் போட்டுது. சுதந்திர அமெரிக்காவில சந்திரனுக்கு சுற்றுலா போக முற்பதிவு நடக்குது. ஆனால் யாழ்ப்பாணத்து சனத்தோட ரெலிபோனிலயும் கதைக்கேலாம கிடக்கு. பாதுகாப்பின் பெயரால் ரெலிபோன் கவரேஜ்கள் காணாமல் போகின்றன. படைத்தளபதியோ மந்திரியோ வருவது கைத்தொலைபேசிக் கவரேச்சில் தெரியும்.

ரிங்.... ரிங்....ரிங்.... ஆ அப்பா நான் பிரதீப் அப்பா கிடைச்சிட்டுது கிடைச்சிட்டுது அப்பா இப்ப இப்ப இப்பதான் தந்தவை. இன்னும் அம்மாவுக்குத் சொல்லேல்ல, அவ சரியா சந்தேசப்படுவா. அப்பா...... அப்பா...... அப்பா...... உங்கால விசா சரிவரும்தானே அப்பா...... பதினாறு வருடங்களாக உருவம் காணாத அப்பாவை உணர்வால் மட்டும் அனுபவித்து இப்போ வாலிப வயதிலும் மழலை மொழி பேசும் விசித்திரமும் இங்குதான்.

போராட்டம் வாழ்வுக்காகவா? இல்லை..... வாழ்க்கையே போராட்டமாக..... மக்களைப் பற்றி யார் சிந்திக்கிறார்? இலட்சியங்களும், அரச இலச்சினையும், சட்டங்களும், கட்சிக் கொள்கைகளும், இராஜ தந்திரமும், சதுரங்கமாடி மக்களுக்கு இலைக்கஞ்சி கூட ஊத்தவில்லையே! காலம் கடந்தால் ஞானம் பிறக்கும் என்பர் இங்கு!

ஏதோ அவளையும், பொடியனையும் இஞ்சால கூப்பிட்டிட வேணும். காணி, வீடு போனாலும் பரவாயில்லை. இன்னும் ஒரு கிழமையால கொழும்பு வந்திடுவினம் எண்டு நினைக்கிறன். பிறகு இஞ்சால வர இரண்டு கிழமை எப்பிடியும் ஒரு மாதத்துக்குள்ள நான் அவையளைப் பார்க்கலாம். அதுக்குள்ள கொழும்பு வந்திட்டால் ஸ்கைப்பில எண்டாலும் ஒருக்கா முகம் பார்த்துக் கதைக்கலாம்.

பதினாறு வருடப்பிரிவும் பரிதவிப்பும் உடல் ரோமங்களின் நுனி வரை உணர்ச்சிக் கொப்பளங்களாக வெடிக்கின்றது. இரண்டரை வருசம்தான் அவளோடை இருந்தன். என்னில் எத்தனை காதல் அவளுக்கு. என்னுயிரோடு அவள் கலக்கவில்லை, என் உயிராகவே அவள். பேசி முடித்த கலியாணம் என்டாலும் முதற் பார்வையிலேயே அவள் என்னவள் என்ற உணர்வு. இரண்டரை வருட தாம்பத்திய வாழ்விலும் சரி, பதினாறு வருட நீண்ட பிரிவிலும் சரி, அவள்

சம்பந்தமாகவா அவள் பேசினாள்! சம்பளத்துக்காகவா அவள் குடும்பம் நடத்தினாள், சடங்காகவா தாம்பத்தியம் கொண்டாள். சஞ்சரிக்கும் எண்ணங்கள் இந்த சுவிஸ் குளிரிலும் என் இதயத்தை சூடேற்றியது.

ஹலோ... ஹலோ.... அப்பா ரிக்கெற்றும் எடுத்தாச்சு. வார வெள்ளிக்கிழமை அதான் 28ஆம் தேதி அப்பா..... சரி... சரி.... என்னெண்டு இவ்வளவு கெதியா எடுத்தனி? முதல்லேயே பதிஞ்சு டோக்கனும் எடுத்தனான். இருந்தும் இஞ்சால அங்கால கொஞ்சம் கொஞ்சம் வெட்டித்தான்.... அட... கட்டாப் போச்சு. அடிக்கடி கட்டாகிறதுதானே எங்கட வாழ்க்கை. வாழ்க்கைவட்டம் எண்டு பள்ளிக்கூடத்தில படிச்சனான். இஞ்சையும் வாழ்க்கை வட்டம்தான் நடக்குது. விறகு - உமி - மண்ணெண்ணெய் - மின்னடுப்பு - காஸ் குக்கர் இப்ப மறுபடி விறகு. வட்டம் எண்டால் ஆரம்பம் முடிவு இல்லாதது. அதுபோல சங்கம் எப்ப திறக்கும், பெற்றோல் எப்ப கிடைக்கும், கப்பல் எப்ப வரும், பிளேன் எப்ப போகும், கரண்ட் எப்ப வரும், எப்ப நிக்கும், எண்டு ஒண்டும் புரியாமல் சுற்றும் வட்டமாக முடிவில் ஆரம்பித்து ஆரம்பத்தில் முடியும் தமிழர் வாழ்க்கை வட்டத்தில் இனப் பிரச்சினை மட்டும் பலமான அச்சாக அட.. அட.. லைன் கிடைச்சிட்டு. (F) பெஸ்ட் பிளைற்றுக்குத்தான் எடுத்தனான். சிலவேளை செக்கன்ட் பிளைட் நிப்பாட்டிப் போடுவாங்கள்...... ஆ.... சரி.... அப்பன் இனி நான் எடுக்கிறன் நீ வை. மூளைக்கு எட்டிய முன்னெச்சரிக்கை எல்லாம் குடாநாட்டு மக்களின் குருதியில் உள்ள செங்குருதி, வெண்குருதிக் கலங்கள் போல காலத்தின் சோதனைக் கலங்களா? பரிமாண வளர்ச்சி என்பது மனிதனின் பகுத்தறிவு உணர்ச்சியைப் பரீட்சிக்கும் நிலையில் இந்த மண்.

அம்மா நாங்கள் முதல் நாளே ரவுன் சித்தப்பா வீட்டை போய் படுத்தால்தான் நாளைக்கு விடிய 5 மணிக்கு கியூவில நிக்கலாம். கேவ்யூவால விடியப் போகேல்லாது. கொஞ்சம் பிந்தினாலும் செக்கன்ட் பிளைற்காரரை எடுத்துப் போடுவாங்கள். அம்மா உனக்கொண்டு சொல்ல மறந்திட்டன்.

அண்டைக்கு கிளியரன்ஸ் தந்த ஆமி என்னோடை வடிவா கதைச்சவன். பெயர் சுதுபண்டா தேப்பன். 96ல முகமாலையில் போயிட்டாராம். அதாலதான் தனக்கு இந்த வேலை தந்தவையாம். தான் எட்டாம் வகுப்பு வரைதான் படித்தவராம் என்டு தேப்பன்ற படத்தையும் காட்டினவர். எனக்கு ஒரே அதிர்ச்சி. அம்மா! அம்மா! அவரோட பக்கத்தில யார் நிண்டது தெரியுமே.


அட சொல்லண்டா..... ஆர் நிண்டால் எனக்கென்ன?

அம்மா நீ சொல்லு பாப்பம்.....

அட எனக்கு மூளை குழம்பிக் கிடக்கு. வீடு, வாசல், காணி, சாமான், சொந்தம் பந்தம், எல்லாம் விட்டுட்டு அப்பாட்ட போறது சந்தோசம்தான். ஆனால் இந்தளவு நாளும் வாழ்ந்த இந்த மண், சூழல் ஏதோ எனக்கு ஒரு மாதிரிக் கிடக்கு.....

அம்மா அது ஆர் தெரியுமே எங்கட அப்பாதான்!

நானும் மலைச்சுப் போனன், எனக்கு அவனிட்ட சொல்லவும் பயமாக் கிடந்திச்சு. எண்டாலும் என்ர அலைச்சலைப் பார்த்து அவனாக் கூப்பிட்டு எனக்குக் கிளியரன்ஸ் தந்தவன் என்டபடியால பயப்பிடாமச் சொன்னன். பக்கத்தில நிக்கிறது என்ர அப்பா எண்டு அவனுக்கு ஒரே சந்தோசம். பிரியந்த சமரவீர தான் தேப்பன்ட



பெயராம். வீட்டை லீவில 96 அளவில வரேக்கதானாம். இந்தப் படத்தையும் தந்து தனக்குப் பக்கத்தில நிக்கிறது மகேஸ் மாத்தையா எண்டு சொல்லி தமிழர் எல்லாம் பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள் இல்லை. அதுகளும் வாழத் துடிக்கிற சனங்கள்தான் எண்டு சொன்னவராம். பிரியந்த சமரவீரவுக்கும் சுதுபண்டாவுக்கும் புரிந்தது ஏனோ இன்னம் இறைவனுக்குப் புரியவில்லை. கலியுகத்தில் தன் கருணை இவ்வளவுதான் முடியும் என்று கண்ணை மூடிக் கொண்டாரே. ரிக்கெட் எடுத்ததை சின்னம்மா விட்ட சொல்லுவம் எண்டு றோட்டுக்குப் போனா குறுக்க மரக்கட்டை அட கொன்வே.

எத்தனை மணியாகுமோ தெரியாது..... கொஞ்ச நேரம் நிண்டு பார்ப்பம். உடல் நிக்குறது உள்ளம் ஓடியது...... நகரங்களில் வீதி விதிமுறைகள் சிவப்பு, பச்சை, மஞ்சள் விளக்குகள், மற்றும் குறியீடுகள் பெயர்ப்பலகைகள். இங்கும் வீதி விதி முறை உண்டு. வீதியில் கட்டை - கொன்வே, வீதியில் தார்பரல் - விரைவுச் சோதனை, வீதியில் ரயர் ஹர்த்தால், வீதியில் கல் - காவலரண், வீதியில் மேடு - இராணுவ முகாம், நகரத்தில் அது வீதி விதிமுறை இங்கு நரகத்தில் இதுதான் வரன்முறை.

சின்ன மாமியிட்டயும் சொல்லியாச்சு. இனி பிரயாணம் தான். இஞ்சயும் படம் பிடிப்பாங்களாம். பிறகு கொழும்பிலயும் படம் பிடிச்சு பதியவும் வேணுமாம். புற்றுநோய் வந்தவன் உள்ளம் போல இலங்கை தனக்கு மட்டும்தான் சொந்தம் எண்டு பற்று வைத்தவன் உள்ளத்தில் இன்னும் எத்தனை விதி முறை வியாதியோ யார் கண்டது!

அப்....அப்..... அப்பன் சு... சுமி வாங்கோ... வாங்கோ இலங்கையில் சீதையைக் கண்ட இராமன் போல என் சுமியை

சுவிஸில் கண்டது பெரு மகிழ்ச்சியாகி சுக அனுபவமாக அதை உணர்த்தியது! ஆதிக்கமான அரவணைப்பும், அருவியான ஆனந்தக் கண்ணீரும், ஆசைமுத்தங்களும் அடுக்கடுக்கானபோது வார்த்தைகளுக்கு எங்கே வழி!..!..! அப்பன் இந்தா இந்த அவுட் கோட்டையும் போடு, இப்ப இஞ்ச சரியான சுனோ... மைனஸ் 28ல இருவர் முகத்திலும் ஆச்சர்யமான பார்வைகளுக்கிடையிலும் எனது கார் ஹைவேயில் கரைந்து கொண்டிருந்தது.

அப்பா! உங்களுக்கு ஒண்டு சொல்ல வேணும் என்ன........!?

சொல்லு!..... நான் சுன்னாகத்தில அந்தப் புளியமர சிவில் ஒபீஸில கிளியரன்சுக்கு நிக்கேக்க ஒரு ஆமி என்னோட கதைச்சவன், அவன் தான் கிளியரன்சும் தந்தவன். அவன்ர அப்பாவின்ர போட்டோ வில அவரோட நீங்களும் நிற்கிறியள்!! எனக்கு ஒரே ஆச்சரியமாப் போச்சு.!!!

ஓம்! அப்பன்........ அந்தநேரம் நானும் இப்பிடித்தான் பாசுக்கு அலைஞ்சு திரிஞ்சனான். பிறகு சமரவீரதான் எனக்கு ஹெல்ப் பண்ணினவர். நல்ல மனுசன். அந்தாள் என்னில ஏனோ நண்பன் மாதிரி விருப்பப்பட்டு படம் எடுக்க வரச்செல்ல ரெண்டுபேரும் அந்தப் புளியமரத்தடியில நிண்டுதான் படம் எடுத்தனாங்கள்..... எனக்கு எல்லாம் இப்ப...... கனவு மாதிரிக்கிடக்கு....!!!

கனவுகளான வாழ்க்கையைச் சொன்ன நிழற் படத்திலிருக்கும் புளியமரம் படமாக மட்டும் இல்லாமல் தமிழர் வாழ்வின் நிஜங்களான வெற்றிகளையும், தோல்விகளையும், அந்தரங்க அபிலாசைகளையும், ஆதங்கங்களையும், சோகங்களையும் நினைவூட்டிக் கொண்டு தலைமுறை பலகண்டு இன்றும் கம்பீரமாக நிழல்பரப்பி நிற்கின்றது.

# 6

# உத்தர தரிசனம்

சீனி - 5 கிலோ, நூடில்ஸ் - 5 பக்கற், சோயா மீற் - 500 கிராம், சோடா 2 பெரிய போத்தல்.... கையிலிருக்கும் தொகையும், விருந்தினர் தொகையும் போட்டிபோட என் மனக்கணக்கில் மகளின் லக்டோஜன் மாக்கணக்கும் வந்து போனது. ''கண்டியால வாறவைக்கு ஐஸ்கிறீம் கொடுக்க வேணும். இப்ப ஐஸ்கிறீமும் வருகுதுதானே. 2 கிலோ பெட்டி வாங்குங்கோ" என என் மனைவி சொன்ன வார்த்தை மந்திர மானதால் எல்லாம் வாங்கிக் கொண்டு வீட்டு வாசல் வந்தேன்.

வரிசையில் நின்ற ஆட்டோ ஒன்றில் ஏறிப் போய் மாளிகாவத்தையிலிருக்கும் தம்பி மகேசனைக் கண்டு மனங் குளிர்ந்து அவனுடைய கோழிக்கூடு வீட்டில் என் மனைவி தந்த பருத்தித்துறை வடை, வடகம், ஊறுகாயையும் வரிசையாய் அடுக்கியபோது லயன் எயாறின் பயணத்தில் என்னுடன் அவையும் நசுங்கித்தான் போச்சு. களைப்பாறச் சற்று உடல் சாய்ந்தேன்.

வான் ரயரின் வண்ணக் கோலங்கள், வந்த உறவினரின் வாய்ப்பேச்சில் ஏ-9 வழியின் நேர்முக வர்ணனை. "உந்தப் பாதையால.. யாரும் வருவினமே..? கஸ்ரம் ஒபீசில நான் எத்தின பேரை கவுரமா அனுப்பின்னான். என்னை இவங்கள் கவுட்டுக் கொட்டச் சொல்லுறாங்கள்.... வெட்ட வெளியெல்லாம் வேகக் கட்டுப்பாடு......... உலகத்தவரின் இன்றைய ஓட்டப் பாதையில் தமிழரின் வேகம்?" மச்சானின் வாயில் மங்களகோசம்.

ஈட்டியாய்ப் பாய்ந்தது இரவுச் செய்தி அறிக்கை. "இரண்டாவ தாய்ப் பயணித்த லயன்எயார் விமானம் காணாமல் போனது" என்ற வருத்தமான செய்தி. வந்த வேலை முடியும் முன் வரலாற்றுப் புகழ்மிக்க திருமலையில் வசந்தாக்கா வீட்டு வராண்டாவில் நான் "இண்டைக்குப் பதியினமோ...?"

"இல்லை. போன மாசம் பதிஞ்சவைக்கு இன்டைக்கு இன்ரவியூவாம்....."

"யாழ்ப்பாணத்தில் அப்படி என்ன வேலை குடுக்கினமோ!"

இந்த மண் எங்களின் சொந்த மண். எல்லைகள் மீறி யார் வந்தவன் என்ற பாட்டுக் கசற்களை ஈயப் பேப்பரில சுத்தி அந்த மண்ணில் புதைத்த நினைவுகள் என் மனக்கண் முன்.

மனைவி எப்படி இருக்கிறாளோ பி.பி.சி கேக்கிறபடியால் விசயம் தெரிஞ்சிருக்கும். அதிகாரிகள் முன் பதிந்து ஆக்கிமிப்பாளர் முன் பணிந்து கப்பலேறிப் போயாச்சு, கரை காணும் வரை கந்தன் தான் என் துணை. இனி தொடர்ச்சியா ஓடுமே......"

"என்னண்டு தெரியேல்ல......! ஐ.சி.ஆர்.சி. வழித் துணை கொடுக்க வேணுமே!"

"இல்லயண்ணை எப்படியும் ஓடும்."

எங்களின் மனத்தாங்கல்கள் இயலாத காரியங்களில் இயலும் என்ற நம்பிக்கை எங்கள் வாழ்க்கையில்.

மறக்க முடியாத மச்சான் வரவுடன் வசந்தாக்கா குடும்பமும் வந்து சேர்ந்தது.

"இவன் மகேசனும் குடும்பத்தோட வாறனெண்டு கொஞ்சம் முதல் போன் பண்ணினவன். அவனோட நீர்கொழும்பில இருந்து நித்தியாக்கா குடும்பமும் வருகினமாம்." மனைவி சொல்ல மீண்டும் மணியோசை.

குருநாகலில் இருந்து ரங்கசாமிப் பெரியப்பா குடும்பமும் நாளைக்கு வெளிக்கிடுறதாயும் லண்டனில் இருக்கும் அவர் மகன் குடும்பமும் நேரே யாழ்ப்பாணம் எங்கடவீட்ட வாறதாய் வந்தது செய்தி. எம் வசதி, தேவை என்று நாம் எல்லோர் வீட்டிலும் போய்த் தங்கியதால் அவர்கள் இப்போ வரும்போது வரவேற்பது தானே முறை. இருந்தும் கொள்ளாதுதான் எம் சிறிய வீடு.

பெரியவிளானில் வைரவநாதன் வீடு என்றால் எவருக்கும் தெரியும். அப்படிப் புகழ்மிக்க செல்வச் செழிப்பான வீடு. கமம் செய்து வாழ்ந்து வந்த நான் இப்ப கொமினிக்கேஷன் வைத்து காலங்கடத்திறன். சமாதானக்கதவு சற்றே திறந்ததால் எம் வீடு நிறைந்தது விருந்தினர் கூட்டத்தால்.

"நீங்க என்ன........ செய்றீங்க....?"

"நான் ரொட்டி.. சாப்... இப்ப... தான்... சத்தி.... எடுத்தனான்."



"கொஞ்சம்.. உங்கட வானொலியைக் குறையுங்கோ"

"சுமதி. சரி நீங்க எப்பிடி இருக்கிறீங்க.....?"

"நான் நல்ல சுகமாக..."

"உங்கட குடும்பத்தார் பற்றி.....?"

"இறந்த அப்பா, இருக்கிற அம்மா, அண்ணா, அக்கா. தம்பி, தங்கை..."

"ஓ.... நீங்க நிறையப் பேர்....!"

"ஆனால் வீட்டில நான் தனிய ஒரு பிள்ளை."

"சரி உங்கட விருப்பம்...?"

"போடா.... என்ற பகவதிப் படப் பாடல்"

"ஆ... உங்களுக்காக... இதோ...." தனியார் வானொலியில் தைரியமாக உரையாடிய தம்பி மகேசனின் மகள் சுமதியின் செயலால் நான் தைரியம் இழந்தேன். என் வசதி கருதி நான் நடாத்தும் கொமினிக்கேஷன் பில் என் சக்தியை மீறி....

விட்டுக் கொடுத்தார்கள்! வரலாற்றில். ஆனால் இவர்கள் இருவரும் எப்படி! சமர்க்களம் ஆடியோர் இன்று சந்தியில் ஒன்றாய். சமாதானக் காற்றே எங்கள் மூச்சு என்றனர். சமனும் சந்திரனும் சந்தித்துக் கொண்டு சரளமான உரை.

"கோமத....?"

"நல்லது"

"ஒயா ஊரு?"

"கட்டைப் பறிச்சான். ஓங்கட கம?"

"உடுகம ஊரு"

"எந்தக் காம்...?"

"பாலாவி மூலஸ்தான காம். ஓயா கம நல்லம். கோயில் கெதர டமேஜ். முன்னம் எல்லாம் நல்லம", அன்பு மொழியோ அல்லது அடுத்து உருவாகப் போகும் மொழியோ தெரியவில்லை. ஆனால் ஒரு ஒளிக்கீற்று.

தொலைக்காட்சியிலிருந்துதான் வந்தது. அரசியற் கட்சி வெளியேறும் வரை அகிம்சை வழிப் போராட்டமாம். சனங்களின் வாழ்க்கையிலும் ஏதோ நடைபெறத்தானே வேண்டும். ஜனநாயகத்துக்காக ஜனங்களா? அல்லது ஜனங்களுக்காக ஜனநாயகமா? செய்தியின் சிதறலில் மனங்குழம்ப, முகம் கழுவி தலைவாரக் கண்ணாடி முன் வந்தபோது முகம் முழுக்கச் சிவப்புக் கொப்பளங்கள். முடியும் மட்டும் உரசிப் பார்த்தேன். நோவும் இல்லை, மறையவும் இல்லை....! என்ன இது என் கோலம்? பின்புதான் புரிந்தது வீட்டுக்கு வந்த விருந்தாளிப் பெண்களின் ஸ்ரிக்கர் பொட்டுக்கள் என் வீட்டு நிலையாடியிலென்று நினைத்து நினைத்துச் சிரிக்கச் சிரிக்க...

சுகமாய் இருந்தது குளியல். கசுர்ணா பீச்சிலிருந்து புறப்பட்டு, பழைய நூல் நிலையம், நயினாதீவு, நல்லூர், பூங்கனிச்

சோலை, சங்கிலியன் தோப்பு, வல்லிபுரக் கோயில், செல்வச் சந்நிதி, கீரிமலை, கந்தரோடை என்று எல்லா இடமும் நாலு நாளிலும் நம் விருந்தினர் அனைவரையும் கூட்டிச் சென்று சுற்றிக் காட்டினேன். நான்தான் ஹீரோ என்று எல்லோரும் வாயாரப் புகழ்ந்தனர். குழந்தைகள் தான் நுளம்புக் கடியையும் குண்டுத்துளை என்று சலித்தனர். எம் தேசத்தில் இன்றும்கூட உடலில் சன்னங்களுடன் எத்தனை குழந்தைகள் வாழ்வியற் சூழலில் எத்தனை மாற்றங்கள், பரிமாணங்கள் விளங்கவில்லை எனக்கு.

சந்திக்குப் போவதென்றால் கூட சந்திர மண்டலம் போவது போல் தலைக்கவசம். எத்தனை கெடுபிடி! இருந்தும் தினசரிப் பேப்பரில் ஓர் உயிர் பலி எனச் செய்தி. ஹீரோஹொண்டாக்களில் திரிவோர் கீதோபதேசம் செய்த கண்ணன் போன்ற அறிவுச் சாரதிகளா என்ன? உறவினர் கொடுத்த அன்பளிப்புக்களால் மனைவியும், மக்களும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

"இதை என்ன செய்யிறது..?"

"தலையை வாரிப்போட்டு இதை ஸ்பிரே பண்ணினால் தலை குழம்பாது."

"அப்ப இது?"

"எலாம் வைச்சால் சேவல் கூவும்"

"இதென்ன?"

"காத்தடிச்சுப் போட்டு தண்ணி விட்டு சுவிம்மிங் பண்றது."

என் பிள்ளைகளின் விழிகளில் ஒரே ஆச்சரியம். ரயிலைக் கூட காணாமல் வளர்ந்தவர்கள்தானே.

எல்லா வேலைகளையும் செய்து முடித்துவிட்டு முற்றத்தில் கிடந்த கட்டிலில் இருந்த என்னிடம் வந்தாள் என் மனைவி. வீடு முழுவதும் விருந்தினர். வளவு நிறைய வாகனங்கள். எல்லோர் மனதிலும் கொண்டாட்டம். என் மனதில் மட்டும் திண்டாட்டம். உடற் சோர்வுடன் உள்ளமும் சோர்ந்து போக ஏனோ உறக்கம் மட்டும் வரவில்லை.

"என்னங்க! இற்றை வரை எவ்வளவு செலவாச்சு?"

"ஓ எல்லாமா ஒரு நாப்பத்தைஞ்சு.?"

"என்னப்பா செய்யிறது!"

"கடன்தான் சமாளிப்பம்...!"

டிஸ்அன்ரனாக்கள், இன்ரநெற் இணைப்பு, கான்போன், வங்கிகள் கணனிமயம், வாசல் வரைவரும் காப்புறுதி நிறுவனங்கள், வியாபாரக் காட்சியகங்கள்...... என வடக்கின் தரிசனங்கள். ஆனால் சாதாரண எம் வாழ்வில்.....? சமாதானத்தின் வரவை என்னால் சமாளிக்க முடியாமல் சாபம் இட்டவன் நான் ஒருவன் மட்டுமா!!! "நாளை எல்லோரும் ஒன்றாய்ப் போகினமாம்" எனக் கூறிய மனைவியின் வார்த்தை தாலாட்டாக என் மனம் தூக்கத்தில் ஆழ்ந்தது. உறக்கத்தில் கூட தரிசனங்கள். தரிசனம் தந்தது ஆண்டவனல்ல. அடுத்து வரவிருக்கும் விருந்தாளி அவதாரம்.

■■■

7

# வினையால் ஒரு வெள்ளைப்புறா

லெப்... ரைட்... லெப்... ரைட்.... அந்தப் பயிற்சி முகாமின் எண்திசைகளிலும் எதிரொலித்த வண்ணம் இருந்தது. அது பயிற்சி முடித்து வெளியேறும் பொருட்டு ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சி. மேடையிலே முப்படைத் தளபதிகளுடன் பிரிகேடியர் கபில ரட்னாயக்கவும் கம்பீரமாக நிற்கிறார். அவர் நாட்டின் வடபகுதியான யாழ்ப்பாணத்திலுள்ள அரியாலைப் பகுதியில் பிரிகேடியராகப் பணிபுரிகிறார். நாட்டில் ஏற்பட்ட இனப் பிரச்சினையால் அவசர கால சட்டத்தின் கீழ் சிவில் நிர்வாகப் பொறுப்புக்களையும் அவ்வப் பிரதேசங்களுக்குரிய பிரிகேடியர்களே கவனிக்க வேண்டியிருந்தது.

"சமன்! எங்கட ஏரியாவில இருக்கிற குடும்ப விபரம் எல்லம் எடுத்தாச்சா?"

"ஓம் சேர். எல்லோருக்கும் ஐ.சி. கொடுக்க வேணும். நாளைக்கு கொடுக்கிறதா கிராம நிலதாரிட்ட சொல்லியிருக்கு சேர்."

"ஸ்கொட்டில நாலு பேரை வரச் சொல்லு. நான் வெளிய போக வேணும்."

அவர் தமக்குத் தேவை ஏற்படும்போது பிக்கப்பில் எங்கும் போய்வர முடியும். அவர் பகுதியில் வசித்த அதிபர் ஒருவர் மீது அவருக்கு ஒரு கண். அதிபரின் கணவர் வெளிநாடு ஒன்றில் பணிபுரிகிறார். அதிபரை ஒருமுறையாவது அடைந்துவிட வேணும் என மனதிலே நெடுநாளாக ஆசை. அதிபருக்கு இரு பிள்ளைகள். ஒருவன் ஓ.எல் படிக்கும் மாறன். மற்றவன் ஆண்டு ஆறில் பயிலும் மனோ.

மாறனுடைய நடவடிக்கையில் சந்தேகம் இருப்பதாகக் கூறி அரியாலை முகாமில் அவனை தடுத்து வைத்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் அதிபர் சாப்பாடு எல்லாம் கொடுத்துவிட்டுப் போவார். பல வழிகளிலும் முயன்றும் அவனை விடுவிக்க முடியவில்லை.

பியந்த.....! இனிப் போதும் வீட்டில தேடுவாங்க. நீ போ...... நண்பனின் பேச்சைக் கேட்கக்கூடிய நிலையில் பியந்த இந்த உலகில் இல்லை. அவன் போதை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு போதைப்பிரியனாகப் படிப்படியாக மாறி வருகிறான். வீட்டிலே ஸ்பெஷல் கிளாஸ் என்ற போர்வையில் தாய் மாலினியை ஏமாற்றி வெளியில் நண்பர்களுடன் சேர்ந்து போதைப் பொருள் பாவிப்பதில் ஈடுபடுவது தினசரியாகி விட்டது. வாழ்வில் பாதியை இழந்த நிலைக்கு அவன் வந்துவிட்டான். அவனுக்கு வீட்டுக் கஷ்டங்கள் ஒன்றும் தெரியாது. தந்தை பெருந் தொகைப் பணத்தை வீட்டுக்கு அனுப்பிவைப்பார். இதைவிட அவ்வப்போது லீவில் வரும்போது நகைகளாகவும், பணமாகவும், பொருட்களாகவும் ஏராளமாகக் கொண்டு வருவார். அவனுக்கு

இவற்றைப் பார்க்கும்போது தந்தையின் தொழிலையே தானும் மேற்கொள்ள வேண்டும் என்ற ஆசை உள் மனதில் எழும்.

மனதிலே எழுந்த சோகத்தை அதிபரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பிரிகேடியரிடம் பலமுறை சென்று பேசிப் பார்த்தார். பலன் ஒன்றும் இல்லை. அவரின் வார்த்தைப் பிரயோகங்கள் அதிபருக்குப் புதிராகவே இருந்தது. அப்போதுதான் பிரிகேடியரின் உள் நோக்கம் புரிந்தது. இப்படிப்பட்ட கீழ்த்தரமான அதிகாரிகளால் தான் இன்னும் எம் பிரச்சனை தீர்ந்தபாடில்லை என மனதினில் எண்ணிக் கொண்டார்.

திடீரென ஒருநாள் மாறன் வீட்டிற்கு வந்தான். "அம்மா! என்னை விட்டுட்டாங்கள். எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. என்ர ஐ.சி.யை உங்கள வந்து இண்டைக்குப் பின்னேரம் எடுக்கட்டாம்.."

"ஐயா எங்க?"

"மே ஒபீசெக்கே இன்னவா!"

"சேர் குட்ஈவினிங்"

"எண்ட....எண்ட.... கோமத?"

"நல்லா இருக்கிறம் சேர். ரொம்ப நன்றி சேர். மகன்ர ஐ.சி. வேணும். எதுக்கு நன்றி? நாங்க செய்யறத செஞ்சிட்ட. இனி நீங்கதான் செஞ்ச வேணும்."

"என்ன சேர் செய்ய வேணும்?"



"எனக்கு நீங்கதான் வேணும்." அதிபர் தமிழ்க் கலாசாரத்தில் ஊறிவளர்ந்தபடியால் அன்று முதல் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டார்.

பட்டியலை எல்லோரும் பதட்டத்துடன் பார்த்துக் கொண்டிருந் தனர். யார்? யார்? எந்த ஊர்? என்று ஒன்றும் புரியவில்லை. கொழும்பு பஸ் நிலையத்தில்தான் அந்தப் பெயர்ப்பட்டியல் தொங்கிக் கொண்டிருந்தது. ஆனால் விடயம் மட்டும் புரிந்து செய்தி பரவத் தொடங்கியது. கொழும்பு-பதுளை பிரயாணப் பாதையில் புளத்சிங்கள என்ற கிராமத்தால் அந்தத் தனியார் பஸ் போய்க் கொண்டிருந்த போது குண்டு வெடிப்பில் பஸ்சில் பிரயாணம் செய்த அனைவரும் இறந்துவிட்டார்கள் என்பது மட்டும் ஊர்ஜிதமாகிக் கொண்டிருந்தது. க.மாலினி என்ற பெயரை அந்தப் பட்டியல் பரிதாபமாகத் தாங்கிக் கொண்டிருந்தது. பரபரப்பாகச் செய்தி பரவியது.

செய்தியை அறிந்த ஊர் மக்கள் திகைத்தனர். அதிபரும் பிள்ளைகளும் எங்கே போயிருப்பார்கள்? அதிபரின் பரிதாப மரணத்தை அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். அதே போல் மாறனும் மனோவும் எங்கே போனார்கள் என்பதும்?

அவர்களின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுத்து பியந்தவால் துடுப்பெடுத்தாட முடியாமல் சரியாகக் களைப்புத் தொட்டது. வேகமாக வந்த பந்து ஒன்று அவனின் தலையைத் தட்டிச் சென்றது. அதன் பின் அவனுக்கு நினைவு இல்லை. உடன் அவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். அவசர சிகிச்சைப் பிரிவு பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

இயங்கிக் கொண்டிருந்த வோக்கியை நிறுத்திவிட்டு சிவந்த கண்களும் தொங்கிய தலையுமாகக் காட்சி தந்தார் கபில

ரட்ணாயக்கா. செய்திகளின் சிதறல்கள் அவர் இதயத்தை துளைத்துச் சென்றன. சீரான வாழ்வு சிலந்தி வலையாக ஒரு நொடியில் அறுந்ததை எண்ணி மனம் கலங்கினார். பஸ் குண்டு வெடிப்பில் மனைவி மாலினி இறந்தது ஒரு செய்தி. மகன் பியந்த போதைப் பழக்கத்தாலும் விபத்தினாலும் இனிச் சுயமாகச் சிந்தித்துச் செயற்பட முடியாமல் சித்த சுவாதீனமுற்றவனாக மாறிவிட்டான் என்பது மற்றச் செய்தி. இனி நான் மட்டும் வாழ்ந்து என்ன பயன் என எண்ணினார். கலைந்த தேனீக்களாக அவர் மனம் சம்பவங்களைச் சுற்றிச்சுற்றி வந்தது. வீணான பெண்ணாசையும், அதிகாரமும் எனக்கு வினையாக முடிந்ததோ என எண்ணினார்.

எண்ணி முடித்த வாக்குகளின் பெறுபேறுகளின்படி பழைய அரசு மண் கவ்வ புதிய அரசு பதவியேற்றது. புரியாத புதிருக்கு விடை காணும் முயற்சியில் புதிய அரசு முனைப்புடன் செயற்பட்டது. புத்தாண்டுடன் போர் நிறுத்தம் புரிந்து கொண்டார்கள்.

சமன் இன்றைக்கு எங்கட போடரில இருந்து அவங்கட பொயின்ருக்குக் கிட்டப்போய்க் கதைக்கலாம் எண்டு யோசிக்கிறன்.

ஓம் சேர். அவையளும் நேற்று வந்திட்டுப் போனவைதானே.

அப்ப என்னோட நீயும், காமினியும், ரஞ்சித்தும் ஆம்ஸ் இல்லாமல் வாங்கோ.

ஓ.கே. சேர். சென்றியில அவையோடை கதைச்சுப் போட்டுப் போவோம்.

நல்லது சேர்.

அவர்கள் எதிரே தெரிந்த காவலரணை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார்கள். அந்தக் காவலரணுக்கருகில் பச்சை வரி உடையில் சிரித்த முகங்களுடன் இரு உருவங்கள் அவர்களை வரவேற்கக் காத்திருக்கின்றன. பிரிகேடியர் நெருங்க நெருங்க எங்கோ பரிச்சயப்பட்ட முகங்களாக! ஓ! இது மாறன் மற்றது மனோ. அவரின் மனதில் மங்கலாகப் பழைய சம்பவங்கள். கைலாகு கொடுப்பதற்காக பிரிகேடியர் நகர்ந்த வேளை அந்தத் திடீர் சத்தம் எல்லோர் கவனத்தையும் திசை திருப்பியது. மிதிவெடியில் ஒரு காலை இழந்த நிலையிலும் மாறனின் கைத்தாங்கலில் கபில ரட்னாயக்கா நிமிர்ந்து நிற்கிறார்.

இணைந்த இரு கைகளின் இறுக்கத்திலும் சமாதானத்திற்கான சரித்திரம் வலுப்பெற்றது.

■■■

8

# பக்திப் பரிசு

"சர்வாணி தொலைத்தொடர்புச் சேவை" அந்தப் பெயர்ப்பலகை திடமாக மின்னொளியில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஆனால் உள்ளே பரபரத்த மனத்துடன் இருந்த கல்பனாவை பிளாஸ்ரிக் கதிரை தாங்கியிருந்தது. கணவனின் செய்திக்காக அவள் காத்திருந்தாள். காலை 5.30 மணிக்கு முதல் விமானத்தில் பிரயாணத்திற்காக புறப்பட்டுப்போன கணவனின் செய்தி இன்னும் கிடைக்காமற் போகவே நிலவின் ஒளியில் வீடு திரும்பினாள்.

"என்னம்மா ரெலிபோன் வந்ததா?"

"இன்னும் எடுக்கேல்ல."

"ஏன்?"

"தெரியேல்லை......மாமி! பகல் 11.00 மணிக்கெல்லாம் பிளேன் போயிருக்கும்."


"அப்ப ஏன் எடுக்கேல்ல!! லைன் கிடைக்கேல்லையோ?"

"தெரியேல்ல......!!!"

இருவரும் ஒருவருக்கொருவர் தம் பதட்டத்தைக் காட்டிக் கொள்ளாமல் கதைத்துக் கொண்டனர். கல்பனா சுவாமியறை சென்று மங்கியிருந்த விளக்கின் திரியைத் தூண்டிவிட்டு விளக்கிற்கு நெய்யூற்றினாள். விளக்கின் சுடர் எதிரேயிருந்த ஐயப்பன் படத்தில் பட்டுப் பிரகாசித்தது. நிம்மதியுடன் படுக்கைக்குப் போனாள். ஆனாலும், அவளுக்கு நித்திரை வரவில்லை.

விமலன், கல்பனாவின் கணவன் பிரபல வியாபாரி. "விமலன் ஸ்ரோர்ஸ்" அவனது சொத்து. அதேபோல் கவினேசும் விமல் கல்பனாவின் உயிருள்ள சொத்துத்தான். விமலன் தந்தை இறந்தபின் வியாபாரத்தைக் கவனித்து வருகின்ற ஒரு கலைப் பட்டதாரியானாலும் வியாபார நுட்பம் தெரிந்திருந்ததால் வாழ்வில் நன்கு முன்னேறி சமூகத்தில் பிரபல்யமாகி விட்டான். என்னதான் வாழ்வில் சகல வசதிகள் இருந்தாலும் அவ்வப்போது ஏற்படுகின்ற சிறுகஷ்டங்களை மறக்கவும், இந்த இயந்திர வாழ்விலிருந்து சிறிது ஓய்வு எடுக்கவும், ஆன்மீக நாட்டமும், கலாரசனையும் ஒருவனுக்கு அவசியம் வேணடும். அதற்கு விமலன் விதிவிலக்கல்ல.

"ஐந்தாம் திருப்படி சாமி பொன் ஐயப்பா! ஐயனே பொன் ஐயப்பா!"



விமலனின் ஐம்புலன்களும் அந்தப் பாடலில் லயித்து விட்டன. அப்படியே ஓர் ஐயப்ப பக்தனாக மாலை போட்டு, விரதமிருந்து இப்போ மகரஜோதி தரிசனத்திற்காக சபரிமலை போகவேண்டி கொழும்புக்குப் பயணப்பட்டிருக்கிறான்.

"ஹலோ......... நான் கல்பனா கதைக்கிறன்!"

"ஆ........கல்பனா!...நான் சுகமாவந்திட்டன்!"

"என்......னப்...பா...எங்கட...கடை....களவுபோட்...!!"

"..................."

"நேற்றிரவு..... நீங்களும் ....போட்டியள்...."

"..................."

"எ....ன்னப்.....பா.... எல்லாம்...... போட்.......டுது!!!

விமலால் ஒன்றுமே பேசமுடியவில்லை. அவன் உடலால் உணர்வால் மிகவும் பாதிக்கப்பட்டான். அவனுக்கு அடிக்குமேல் அடி. பிளேனால் வந்திறங்கி ஓட்டோ எடுத்து நண்பனின் வீடு விசாரிக்கும்போது ஓட்டோவுடன் பாக், பணம் எல்லாம் பறிபோனது கல்பனாவுக்குத் தெரியாது. எப்படியோ நண்பனின் வீடடைந்து வியாபார நண்பர்களின் உதவியுடன் சபரிமலை போய் ஆண்டவன் சோதனையோ? யார் படைத்த வேதனையோ? என எண்ணி மகரஜோதியில் மனங்கலந்து வழிபட்டான்.

ஆனால், விடயமறிந்த கல்பனா விசரிபோல் ஆனாள். ஐயப்பா உன்னைத் தொழுதோம். எமக்கு இந்த நிலையா? இனி உன்னை வழிபடேன் என்று கூறி படத்தை எடுத்து ஒரு ஓரத்தில் போட்டாள்.

அன்று முதல் சுவாமியறையுடன் அவர்கள் குடும்பமும் இருண்டது. தாயின் நிலைகண்டு கவினேஸ் பள்ளி செல்லாது படுக்கையுடன் ஒட்டிக் கொண்டான். மாமியார் நோய் கண்டு ஆஸ்பத்திரிக்கும் வீட்டிற்குமாக அலைந்து திரிந்தாள். இது போதாதென்று அடிக்கடி பொலீஸ் விசாரணை வேறு. உற்றார் உறவினர் எவ்வளவோ ஆறுதல் கூறினர், தந்திகளும் கடிதங்களும் வந்து குவிந்தன, தொலைபேசியிலும் பலர் துக்கம் விசாரித்தனர். இருந்தும் என்ன பயன்!

தரிசனம் முடிந்ததும் இந்தியாவைச் சுற்றிப் பார்க்க எண்ணியிருந்த விமலன் அருளை மட்டும் வேண்டி பொருளொன்றும் வேண்டாது வெறுங்கையுடன் வீடு வரவேண்டி இருந்தது.

விமலன் கல்பனா இருவரும் சந்தித்துக் கதைத்துக் கொண்ட சோக சம்பவங்கள் அவர்கள் வாழ்வில் இனிச் சரித்திரங்கள் தான். "இப்படியொரு கஷ்டம் இனி யாருக்கும் வரக்கூடாது ஐயப்பா!" என மனதிலே வேண்டிக் கொண்டான்.

"கல்லறை வரை வேண்டும் சில்லறை" என்று ஒரு புத்தகத்தில் என்றோ படித்த ஞாபகம். இப்போது அவனின் முதல் அல்லவா முழுதும் போய்விட்டது. மனக்கஷ்டம் தீர பஜனை செய்யலாம் என எண்ணி சுவாமி அறைக்குப் போனான். அறை இருண்டு கிடந்தது. ஐயப்பன் படத்தையும் காணவில்லை. அதனால் கணவன் மனைவிக்குள் விரிசல்.....!

"சாமி! சாமி! என்றீர்களே இப்போ நாம் தெருவெல்லாம் சரணம் போட வேண்டிய நிலை......"

"கல்பனா!...சாமி எம்மைக் கைவிடார்....."

"எம் வாழ்க்கையை வாரிவிட்டாரேயப்பா..."

"கல்பனா! அவர் மீது இன்னும் எனக்கு நம்பிக்கை, அவர்தாம் எமக்கு ஆறுதல்...."

"எனக்கு ஆறுதல் தந்தது இந்தக் கடிதங்களும், தந்திகளும் தான்" எனக்கூறி விமலனின் முகத்தில அவற்றை வீசியெறிந்தாள்.

கோபம் கண்ணை மறைக்கினும் கும்பிட்ட தெய்வம் குறுக்கே நின்றது. நிதானமாக அவற்றைப் பொறுக்கி எடுத்தான் விமலன். துக்கத்தில் துவண்ட கல்பனாவின் கண்ணில் படாது பிரிக்கப்படாமலே பல கடிதங்கள் அதில் வங்கி முத்திரையுடன் ஓர் கடிதம் பிரிக்கப்படாமல் இருந்தது. கடையை பெருப்பிக்க எடுத்த 'லோனைக் கட்டச் சொல்லித்தான் வந்த வங்கிக் கட்டளையோ? பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்று பழமொழி சொல்வார்களே அப்படித்தான் எம் நிலையோ?' ஏன மனக் குழப்பத்துடன் அதைப் பிரித்துப் படித்தான்.

நீங்கள் கொள்முதல் செய்த ரிதிரேகா சேமிப்பு சான்றிதழ் gp [p I 140271 இலக்கத்திற்கு இம் முறை குலுக்கலில் முதல் பரிசான ரூபா 4,800,000. (ரூபா நாற்பத்தெட்டு இலட்சம்) கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கான காசோலையை ஆறுமாத காலத்துக்குள்......

விமலன் கண்ணில் இருந்து வந்த கண்ணீரைக் கண்ட கல்பனா மனம் இரங்கி மன்னிப்புக் கேட்டாள். விடயம் தெரிந்த அவள் விழிகள் ஆச்சரியத்தால் விரிந்து கொண்டன. விரிசல் கண்ட உள்ளங்கள் இரண்டும் இணைந்து இன்பங் கண்டன.

"அடியாரைக் காக்க அன்புடன் வருக....

"வருக வருக வாசவன் மைந்தா......

"வருக வருக மணிகண்ட.............................."

ஐயப்ப கவசத்தின் அந்த வரிகள் அவர்கள் வாழ்வின் வசந்த வாசலில் காற்றில் சங்கமித்தன.

■■■

9

# கச்சான் ஆச்சி

'கனடாவில் இருந்துவரும் MI 316 போயிங் 777 விமானம் இன்னும் ஐந்து நிமிடங்களில் செக்சன் 3, ரண்வே 12B யில் தரையிறங்கவுள்ளது." மும்மொழிகளிலும் வசீகரமான உச்சரிப்புக்கிடையில் அந்த விமான நிலையம் தன் பரபரப்பான செயற்பாட்டை ஊழியர் தலையில் சுமத்தி அவர்களை ரோபோக்கள் ஆக்கியது.

ஈழநாட்டுக்கு இருபது வருஷத்துக்குப் பின் வரும் சுரேஸ் மண்ணில் காலடிபடாமலே கட்டுநாயக்காவைக் கடந்து கரவன் வானில் கல்கிசை நோக்கி போய்க்கொண்டிருந்தான். தோளில் சாய்ந்த நிமியின் சூடான சுவாசக்காற்று அவன் நெஞ்சில் சுகம்கூட்ட நிமியின் மடியில் துஷான் தூங்கிக் கொண்டிருந்தான். அருகில் ஜனா வானின் கண்ணாடி வெளியால் இலங்கை அழகையும், அழுக்கையும் இரசித்தும், வியந்தும் ஆச்சரியத்தில் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்க சுரேஸின் அன்பான கட்டளை அவனுக்குக் கடிவாளம் போட்டது.

கேயாபுல்..... ஜனா.... துள்ளக்கூடாது. துஷான் தூங்கிறான். டிஸ்ரப் பண்ணக் கூடாது. பிளீஸ்... டாட்....... ஐ லைக்.. ரூ ... சி பிளீஸ்... டாட்...... பிளீஸ்........

ஜனாவின் இந்த இரங்கல் வார்த்தைகள் சுரேஸை சுதுமலைக் கிராமத்திற்குள் கொண்டு வந்தது. குழந்தைத்தனமான சிறு விருப்பங்கள், ஆசைகள், விளையாட்டுக்களைக் கூட வெளிக்காட்ட முடியாத இறுக்கமான குடும்ப வளர்ப்பும் கல்வியை முன்னிலைப் படுத்தும் கலாச்சார அமைப்பும் யாழ்ப்பாணத்திற்குரிய கௌரவமும் அவனுக்கு அப்போது கசந்ததில் வியப்பில்லை. ஆசைகளை விருப்பங்களை இலட்சியங்களை நிறைவேற்ற முடியாத மனித வாழ்வில் பிரயோசனமில்லை. ஆயினும் தடம் புரளாத தண்டவாளத்து தமிழ் கலாச்சார வாழ்வு தரணியில் தம்மைத் தலை நிமிர்த்தும் என்பதைப் பலர் நினைத்துப் பார்ப்பதில்லை. சாரதியின் சடுதியான பிறேக்கில் சுரேஸின் சிந்தை சிதற அவன் கண்கள் 'கல்கிசை வரவேற்கின்றது' என்ற போட்டில் நிலைகுத்தின.

"தம்பி அந்த பொலித்தீனை வடிவா இளுத்து விடு ராசா..........."

பூரணம் ஆச்சியின் தழுதழுத்த குரல் மழையின் வரவைக் கட்டியம் கூறியது. குந்தியிருக்கும் பூரணத்தின் முன் வட்டச் சுளகில் சுடசுட கச்சானும், சோளனும் குவிந்து கிடக்க அருகில் போத்தலில் மஞ்சளக்கடலையும் பல்லிமுட்டை இனிப்பும், புல்டோ ரொபியும், சூப்புத்தடியும், வானவில்லின் வர்ணங்கள் தோய்த்து வடிவாய் அடுக்கிக் கிடந்தன. அவையருகில் சுவையான பீடாவும், வெற்றிலைச் சுருள்களும், கோடாச்சுருட்டும், 1 ரூபா, 5 ரூபா கச்சான் அளக்கும் குட்டன்களும் பசைபூசி ஒட்டிய கடதாசிப் பைகளும் வாடிக்கையாளர் வரவைப் பார்த்துக் கிடக்க பூரணம் ஆச்சி

சுதுமலையைச் சுற்றி எட்டுப்பட்டிக் கிராமமும் அறிந்த பெரும் தரகு (புறோக்கர்) மனுசி.

எடுத்த காரியத்தை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல கச்சிதமாய் சாதிக்கும் தன்மை, அவளின் வெற்றிலை சப்பும் வாயிலிருந்து வரும் வார்த்தை ஜாலத்தில் இரு சாராரையும் சம்மதிக்க வைத்து சம்பந்தப்பட்ட விடயத்தை ஒப்பேற்றிக் கொடுத்து அதில் வரும் வருமானம் (புறோக்கர் பீஸ்) அவளுக்குப் போனஸ்தான். மற்றப்படி அவள் கச்சான் கடையே அவள் குடும்பத்தைக் கட்டியிழுக்கும். சுடச் சுடக் கச்சான் விற்பது போல் அவள் விடயங்களையும் இழுத்தடிக்காமல் உடனுக்குடன் ஒப்பேற்றும் தன்மையால் எட்டுப்பட்டிக் கிராமத்திற்கும் அவள் முடிசூடா ராணியாக விளங்கினாள்.

நாலு பூவரசம் தடியும், இழுத்துக் கட்டிய தளப்பாளும் நீள் வாங்கும் கொண்ட அவள் கச்சான் கடைக்கு நிழல் கொடுப்பது என்னவோ அம்பாளின் தல விருட்சமான அரச மரம்தான்.

அதிகாலை 5.30 மணிக்கே கோவிலுக்குச் சென்று கூட்டிப்பெருக்கி பூச்சாத்தி சூடம்ஏற்றி தன் பாணியில் அம்பாளுடன் கதைபேசி அதன்பின் கடை பரப்புவதே அவளின் நெடுநாள் செயற்பாடு. அம்பாள் குலதெய்வம் என்பதனால் குறுக்கு விசாரணை செய்வது போல அவளுக்கு ஓர் உரிமை. அதேபோல் கஷ்டம் எண்டாலும் கொட்டித்தீர்க்க என்ர அம்பாள் என்ற தோழி உணர்வு.

ஆச்சி! நகைக்கடைக்காரன் என்னவாம், மடிவானோ!! இண்டைக்கி மதியமில்லே வரச் சொன்னனான்? எண சொல்லண! நீ கூட மடக்கிறத்துக்கு யோசிக்கிறா போல.



அட...... அட....... இல்லராசா...... அதுகள் அக்கம்பக்கம் நல்ல சனமோ எண்டும், போக்குவரத்து வசதியோ எண்டும்தான் யோசிக்குதுகள். மற்றப்படி விலை எல்லாம் சரி. நான் கூடவும் சொல்லேல்ல குறையவும் சொல்லேல்ல. ரண்டுபரப்புக் காணி நாச்சார் கல்வீடு தனிக்கிணறு, பன்னெண்டு முழப்பாதை, இதுக்கு அதுகள் முப்பத்தைஞ்சு தரச் சம்மதம். அம்மாளாச்சி இண்டைக்கி எல்லாம் சரிவரும் சொல்லிட்டுது. நீ போய் மதியம்வா. அட்வான்சை நான் வாங்கித்தாறன். பிறகு மூன்றுமாதத்துக்குள்ள அதுகள் முழுக்கக் குடுத்து முடிக்குங்கள். என்ரமூத்தவன் சுரேஸும் இண்டைக்கு பொழுது சாய வந்திடுவான். மதியம் எப்படியும் முடிச்சுக் குடுப்பன். சரி..... சரி... போட்டுவா...... என்ர...... யாவாரத்த குழப்பாத..!!!

அம்மா! உனக்கேணணை உந்தவேலை. நாங்கள் மாதம் மாதம் மூண்டு பெடியளும் காசு அனுப்புவம்தானே. உந்த கச்சான் விக்கிற யாவாரத்த விடு!

அட..... போடா..... எனக்கு புத்திசொல்லவோ இஞ்ச இப்ப வந்தனி.....

என்னணை.... நாங்கள் சொல்லுறதில....... ஆசைப்படுறதில என்ன தப்பு.

ஓமடா..... போ..... போ...... நீ இப்ப இப்படி ஆசைப்படுறா அப்ப என்ன ஆசைப்பட்டனி தெரியுமே??

என்ர பல்லிமுட்டை இனிப்பு வேண்டாம் சொக்கிலட்டு வேணுமெண்டா, திருவிழாவுக்குள்ள ஒவ்வொருநாளும் ஐஸ்கிறீமும் வேணுமிண்டா, நல்ல செருப்பு வேணும் எண்டா, பிறகு கொஞ்சம் வளர றலிசைக்கிள்தான் வேணும் எண்டா, பிறகு ரூர் போக காசுதா

எண்டா, (B)பாங்கு உத்தியோகம் எடுக்க அம்பதாயிரம் குடுக்க வேணுமெண்டு அதையும் துலைச்சா, பிறகு நான்தானே 83டில வெளியால அனுப்பின்னான். அடே......... அடே எல்லாம் இந்தக் கச்சான் பிளைப்பாலதான் கிடைச்சது. அப்ப உனக்கு எல்லாம் வேணும். இப்ப நான் கச்சான் விக்கக்கூடாதோ!!!

சரியணை..... சும்மா கத்தாத..... வசதியிருக்கேக்க ஏணணை கஷ்டப்படுவான்.

மகனின் மயக்கும் ஆதங்க வார்த்தைகள் எல்லாம் அவளின் பெரிய தொங்கும் தோட்டுத் துவாரத்தோடு சரி, காதில் ஏறவில்லை.

அப்பாவும், ஆச்சியும் பேசிக்கொள்வதை என்னவோ அமெரிக்கன் W.W.W.F மல்யுத்தம் போல துஷானும், ஜனாவும் வினோதமாக ரசித்தார்கள். அப்பா இவ்வளவு சத்தமாகவும், சந்தோஷமாகவும் கதைத்ததை அவர்கள் இன்றுதான் கண்டார்கள். எவ்வளவு நல்ல விலேஜ், கொஞ்சம் டஸ்ட்தான். ஆனாலும் நல்லம். அங்க ஸ்கூல், ரியூசன், கேம் எண்டு...........!! இஞ்ச பிறீயா போகலாம்....... வரலாம்..... விளையாடலாம். மம்மி நாங்க ஆச்சியோடதான் நைட் படுப்பம். சின்னச்சிறிசுகளின் ஆசையை பூரணத்தின் முகத்தலைப்பு நிறைவேற்றியது.

நகைக்கடைக்காரன் கச்சான் ஆச்சியின் வாதப்பிரதி வாதங்களில் பட்டுத்தெளிந்து 35க்குச் சரிஎண்டான். அட்வான்ஸ் கைமாறியது. அத்தோடு தரகுப் பணமும் இரண்டுசாராரும் ஆச்சிக்குக் கொடுத்தார்கள்.

பூரணம் ஆச்சியின் கணவர் 72ல போனபிறகுதான் ஆச்சி புறோக்கர் வேலைக்கு இறங்கி இப்ப எட்டுப்பட்டிக் கிராமத்தில

எந்த மூலை முடுக்கிலும் என்ன நடந்தாலும் ஆச்சிக்குத் தெரியும்.

அடே........ தம்பி சுரேஸ்.......... நித்திர வராட்டி உந்த ஏ.சி.ய தட்டிவிடு............

ஆச்சியின் உழைப்பின் சேமிப்பின் தேற்றம் அவள் வீட்டில் பிரகாசித்தது.

பளிங்குக்கற்கள் பளபளக்க, முதிரைக் கதவுகள் முகப்பை அலங்கரிக்க, ஓட்டுநிரையின் அழகும், உயர்ந்த தண்ணீர்த் தொட்டியும், ஒளிரும் மின்விளக்குகளுமாக அது ஓர் வசந்த மாளிகைதான். மாளிகையில் அவள் எப்போதும் தனிக்கட்டைதான். ஆனால் இப்போதுதான் வசந்தம் வீசுகிறது.

இண்டைக்கு தயாளனும் இத்தாலியால வந்திடுவான். அவன்ர மனுசி மயிலிட்டி தானே. எப்ப அந்தப் பக்கம் சனங்களை விடப்போறாங்களோ தெரியாது. பேத்தி சுஸ்மிதாவை படத்தில பாத்ததுதான். இருந்தாலும் மழலை மொழியையும், குறும்பையும், குதூகலத்தையும் நேரில பார்க்க ஆச்சிக்கு ஆசைதான்.

சட்டாம்பியார், ஏன் காணும் கச்சான் ஆச்சிய இந்தப் பக்கம் காணேல்ல? இண்டைக்கு ஆடிச் செவ்வாய். நல்ல சனம்! மனுசிக்கும் நல்ல யாவாரம் நடக்கும். சனங்களும் செருப்பு வைக்க இடமில்லாமல் அந்தரப்படுகுதுகள்.

கந்தப்பு உனக்கு விசயம் தெரியாது போல!! ஆச்சீன்ர பெட்டைக்கு ஆவணியில கலியாணமாம். அதுதான் ஆச்சீன்ர மக்களெல்லாம் வெளியால இருந்து வந்திட்டாங்கள், அதுதான் மனுசி வரேல்ல.

மூன்றாவது மகன் சேயோனும், மச்சாளும், கலியாணப் பெம்பிளை தாராவும் யு.கே. யால கொழும்பு வந்திட்டினமாம், இரவு பலூன்பஸ்ஸில புக் பண்ணியாச்சாம். விடிய வந்திடுவினம் என்டு இப்பதான் போன் பண்ணினவை.

மருமகள் சுமதி சொல்ல பூரணம் ஆச்சியின் உள்ளப் பூரிப்பில் பொக்குவாய் மலர்ந்தது. ஆம். ஆச்சியின் கடைக்குட்டிதான் தாரா. மூன்று பெடியளுக்கும் ஆச்சிக்கும் அவள்தான் செல்லப் பிள்ளை. 95இலதான் யு.கே சின்னண்ணேற்ற போனவள். இப்பதான் வாறாள். அவளின் கலியாணத்திற்குத்தான் சொந்தங்கள் பந்தங்கள் எல்லாம் சுதுமலைக்குப் படையெடுக்குதுகள்.

மகன் வந்ததும் வராததுமாக கண்டறியாத உந்த யாவாரத்தை விடணை. என்னோட லண்டன் வாணை. நான் உன்னைப் பாப்பன் தானே. உனக்கேணணை உந்த வயசில உந்த வேலை.

அடே ராசா! நீ சொல்லுறா! நல்லது. சந்தோஷமடா. ஆனாலொண்டு கட்டேல போறவரை நான் உழைப்பன். கொப்பர் உங்களை ஒப்படச்சிட்டு கெதியில போட்டார். அந்தப் பொறுப்பிலயே கிடந்து பழகியாச்சு. உந்த யாவாரம் தான்ரா என்ர ஜீவன், உயிர் எல்லாம். வெற்றிலை பாக்கை குட்டானிலிட்டு இடித்தபடி அவள் கூறிய பதிலுக்கு மறுபேச்சுப் பேச முடியாமல் உணர்ச்சியின் விளிம்பில் சேயோன்.

அடே ராசா! விவசாயி, கொல்லர், சலவைத் தொழிலாளி, சிகை அலங்கரிப்பாளர், புரோஹிதர், தச்சர், பத்தர், மேசன் எண்டு இவயின்ர பிள்ளைகள் எல்லாம் அந்தந்தத் தொழில்களை இழிவா நினைச்சால் பெத்து வளத்ததுகளின்ர மனம் எவ்வளவு கவலைப் படும் தெரியுமே.

அடே! செய்யும் தொழிலே தெய்வமடா. உன்ர உணர்ச்சி யெல்லாம் லண்டன் குளிர்ல உறைஞ்சு போச்சுப் போல? இது ஈழமடா. இஞ்ச இப்படித்தான் பிழைப்பு.

வெற்றிலை பாக்கை வாயிலிட்டு மென்று கொண்டு அவளின் கற்றக் (Cataract) பார்வை சேயோனையும் மருமகள் கோசலாவை யும் மொய்க்க அவள் மனதில் எண்ணங்கள் எகிறிக் குதித்தன.

ச்ச்சா....!! அதுகளும் கலியாணம் முடிச்சு மூண்டு வரியமாச்சு. கோசலான்ர வயித்தில ஒரு பூச்சி புழுவையும் காணேல்ல. நல்லதம்பிச் சாத்திரி வசியப் பொருத்தம், சந்தானப் பலன் எல்லாம் திறமெண்டு சொன்னவர். அம்மாளாச்சிதான் சோதிக்கிறாள் போல. அவளுக்கு ஒரு 1008 சங்காபிஷேகமும், சந்தனக் காப்பும், மடையும் போடவேணும்.

அடே! ராசா! நீங்களெல்லோரும் எல்லா இடமும் சுத்திப்பாக்க ரவீன்ர வானுக்குச் சொல்லியிருக்கிறன். நான் யாவாரத்தையும் பாத்து கலியாண ஆயத்தங்களையும் செய்வன். பிள்ளையள் கவனம். சின்னன் சிறிசுகள். இஞ்சத்த வெய்யில் ஒத்துவருமோ தெரியாது.......... என்று கூறியவள் தன் வியாபார ஆயத்தத்துடன் நடையைக் கட்டினாள். அவளின் நடைக்குமுன் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

டொக்ரரம்மா நல்ல மாருதி பாக்கச் சொன்னவா, பெரியதம்பி வயல் குத்தகை எடுத்துத் தர சொன்னவர், மோகன் மாஸ்ரர் தன்ர லைட் இஞ்சினக் குடுத்துத்தரச் சொன்னவர், குருக்களையாவும் நல்ல பசுமாடு நிண்டா சொல்லச் சொன்னவர், ராபீக்குக்கும் பழைய இரும்புச்சாமான் தீர்க்கவேணும்.......... பி.ஏ. வைத்து கணனியில் ஒழுங்குபடுத்த வேண்டிய அவள் புரேகிராம் எல்லாம் அவளின்

நரைமுடிக்குள்ளிருக்கும் மூளையின் பதிவில் தெள்ளத்தெளிவாக ஓடிக் கொண்டிருந்தன.

சொந்தபந்தங்களோடு பூரணமாச்சியின் வாடிக்கையாளரெண்டு தாராவின் கல்யாணம் ஊர் வியக்கும்படி நடந்துமுடிந்தது. குடும்பங் களெல்லாம் தங்கள் கூட்டுக்குத் திரும்ப இப்போ பூரணம் ஆச்சி மட்டும் தனிமையில். வியாபாரம், தரகு வேலை எண்டு அவளின் வாழ்க்கை கிராமத்தோடு கலந்து லயிக்க அம்மாளாச்சியின் திருவிழாவும் வந்தது. ஆச்சியின் கடைமுன்தான் குடும்பப் புதினம், ஊர்ப் புதினம், உலகத்துப் புதினம் எல்லாம் பேசப்படும்.

திருவிழா என்றால் அவளுக்கும் வேலை கூடத்தான். ஓட்டுசுட்டானிலிருந்து வரும் கச்சானைத் துப்பரவு செய்து வறுத்து வியாபாரம் செய்ய வேணும். பாதிவேளை அடுப்போடுதான். அதனால் அவள் காச்சல் கண்டு பத்துநாள் இருக்கும். சுக்கு, மிளகு, திப்பிலி எண்டு மருந்துக்கும் வேலையில்லாமல் இனி இந்த உலகில் உனக்கு வேலையில்லை எண்டு அவளை அம்மாளாச்சி தன்னோடு கூப்பிட்டாள்.

அவளின் இழப்பை ஊர் ஏற்கவில்லையோ என்னவோ, சிறுகாற்று மழை எனத் துவங்கி மூன்று நாள் பெருமழையோடு நிஷாப் புயலும் வீசி ஓய்ந்தது. அவள் மடிந்த சோகமோ, உறவை இழந்த உணர்வோ 200 வருஷ பழமையான அம்பாளின் தல விருட்சமும் பூமியின் மடியில் சாய்ந்தது. ஊர் மக்கள் எல்லோருக்குமே அதிர்ச்சி.

பெண் விடுதலை, சம உரிமை எனப் பேசியவர்கள் மத்தியில் அவள் சர்வ சாதாரணமாக ஆளுமையுள்ள ஓர் ஆச்சியாக வாழ்ந்து காட்டியவள்.

•

தலைகீழ் தோரணமும், சந்தி எங்கும் வாழை மரமும், வீடுகள் கடைகள் எங்கும் கறுப்புக் கொடிகள் என்று ஊர் சோகத்தில் மூழ்க, துஷானும், ஜனாவும், சுஸ்மிதாவும், பூரணம் ஆச்சியின் நேர்த்தியால் கிடைத்த சேயோனின் 3 வயதுக் குழந்தை ஆத்மஜனும் தீப்பந்தம் பிடிக்க பூரணம் ஆச்சியின் இறுதிப் பயணம் ஆரம்பமானது.

இம்முறை திருவிழாவில் பூரணம் ஆச்சியின் கடையிருந்த இடம் வெறுமையாகவே இருக்க எதிரே புதிய கடையில் பக்கட்டில் பொதிசெய்து இறக்குமதி செய்யப்பட்ட கச்சான் இனிவரும் சந்ததிக்காக! சந்ததிகள் தொடர்கின்றதுதான். ஆயினும் இனிவரும் தலைமுறையின் கௌரவச் சின்னமாக சில்லி மக்ஸ்ட் பியூநட் உறைகள் கோவில் வீதியெங்கும் வீசிக் கிடக்கும்.

■■■

10

# பக்குவம்

மூன்சில்லின் வேகத்திற்கு ஏற்றவாறு முடிந்த வரையில் பள்ளம் மேடுகளைத் தவிர்த்து வீதியை உற்றுநோக்கியபடி மோகன் தன் சீ பீ சற் வண்டியை லாவகமாகச் செலுத்திக் கொண்டிருந்தான். சக்கரங்கள் செம்மணி காப்பெற் வீதியைத் தொட்டதும் அவன் எண்ணக் குதிரைகள் வீதியைவிடுத்து விதியின் விளையாட்டை எண்ணத்தொடங்க நேரம் சரியாக 7.30 மணி. இந்த இராப்பொழுதின் பூரண நிலவொளியில் அவன் நிழல் காப்பெற் வீதியில் கரைந்துகொள்ள மைல்கற்களைக் கடந்தது பயணம்.

கோவிலாக்கண்டியில் மீள்குடியேற்றத்திற்கு இந்திய அரசநிதியுதவியால் அமைக்கப்பட்ட நூறு வீட்டுத் திட்டம் நாளையதினம் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்ட உரிமை யாளர்களுக்கு வைபவ ரீதியாக கையளிக்கும் விழாவாகும். முழுப்பொறுப்பும் மோகன்வசமே. உள்நாட்டு அபிவிருத்தி இடர் முகாமைத்துவ அமைச்சின் வடமாகாணப் பொறுப்பதிகாரி என்கின்ற

பொறுப்பான பதவி, பவிசு, பணி என்று நேரங்காலமில்லாமல் அவன் சுற்றிக் கொண்டிருப்பான். வீதி அலங்காரம் முதற்கொண்டு வீட்டிற்குரியவரிடம் அமைச்சர் துறப்புக்களை ஒப்படைப்பது வரை எல்லாவற்றையும் கனகச்சிதமாக ஆற்ற வேண்டும் என்கின்ற ஆர்வம் அவனை ஆட்கொள்ள அந்தவேளையில் அவனின் மோட்டார் சைக்கிள் கைதடி தெருப்பிள்ளையாரின் சன்னிதியின் முன்நிற்க கைகள் பாக்கெட்டில் சில்லறையைத் துளாவி எடுத்து உண்டியலில் இட்டதும் சந்தனப் பொட்டில் அவனும், வண்டியும் வயல்வெளியில் வளைந்த வீதிகளிலிறங்கி வளைவு சுழிவுகளில் வண்ணக்கோலம் போட அவன் தன் வாழ்வுக்கோலம் வரையப்பட்ட புள்ளிகளை எண்ணுகின்றான்.

ரீச்சர்! இவன் என்ன மண்ணுக்க தள்ளிப் போட்டான்! நல்லா அடியுங்கோ ரீச்சர் என்று சொன்ன அந்த ஐந்துவயது மழலையின் விரல் மோகனைச் சுட்டி நிற்கின்றது. வகுப்பிலேயே மோகன்தான் அதிக குழப்படி. ரீச்சரின் சம்பளத்துக்குமேல் அவரிடம் வேலை வாங்குபவனும் அவன்தான். எல்லோருடைய பொறுமையின் மைக்கல்லாக இருப்பவனும் அவனே. மோகனை மட்டும் சமாளித்தால் மற்றெல்லா மாணவர்களையும் சமாளிக்கலாம் என்று அந்த நேசரி ஆசிரியைகள் தங்கள் ஆதங்கச் செய்தியை தினமும் தலைப்புச் செய்தியாக்கிக் கொண்டனர்.

ஆறு வயதானதும் அவன் கல்லூரியில் தரம் ஒன்றில் கால்பதித்த முதல்நாளே தலைமை ஆசிரியர்முன் சினிமாப் பாடலிசைத்து அனைவரையும் சிரிக்க வைத்தான். ஆனால் அது நீடிக்கவில்லை. தண்ணீர்க் குழாயை உடைத்து அதற்கான தண்டனையை கல்லூரி வந்த முதல்நாளே பெற்றுக் கொண்டான். சீழ்வடிந்த



மூக்கும், சிதறிய தலை மயிரும், பட்டன் இழந்த சட்டையும், சகதியான சப்பாத்துமாக அவன் வரும் கோலம் எல்லோரையும் அவன் மீது வெறுப்புக்கொள்ள வைத்து ஒதுங்க வைத்தது. தன்னைவிட்டு ஒதுங்குகிறார்கள் என்று அவனுக்குத் தெரிந்தால் அவன் சீண்டலும் அதிகமாகும். எல்லா வெள்ளை உள்ளங்களும் அவனைச் சிவப்புப் பட்டியலில் சேர்த்துக் கொண்டன.

எண்ணிக்கொள்ள முடியாத அளவு அவனின் வேலைகள் பட்டியலிட்டு பைல்களில் பதுங்கிக் கிடந்தன. பைக்கை ஸ்ரான்டில் விட்டு பைல்களைக் கையிலிடுக்கி அவன் அந்த அழகிய கோவிலாக்கண்டி கிராமத்தில் கால்பதிக்க கரண்ட்டும் கட்டாக சரியாக இருந்தது. ராரா... ராரா.... சரசுகு......... ராரா...... தாம்ததீம்த......... தோம்...... த..... தா....... சந்திரமுகியின் ஹிட் பாடல் அவன் செவிப்பறை சேர செல்போனை அவன் கிட்பாக்கில் தேடினான். ஓ..! நான் ஸ்பொட்டில தான் நிக்கிறன் சேர்...! எல்லாம் நல்லபடி அரேஞ்பன்னிறன்...... இல்ல இல்ல சொன்ன ரைமுக்கே பங்ஷன் தொடங்கலாம். மீடியா எல்லாம் ரைமுக்கு வந்திடுவாங்கள். ஓ.கே சேர் ஓகே.... ஓகே.... குட்நைட்.

அந்த இருட்டிலும் அவன் தன் அதிகாரியின் மதிப்பிற்கு ஒளியேற்றினான். நம்பிக்கை என்பதும், செயற்பாடு என்பதும் உள்ளத்தின் உறுதியில்தான். அவன் பூட்ஸ் கால்கள் அந்த ஒழுங்கையின் மணலில் தடம்பதிக்க ஒளியும் உயிர்பெற்றுக் கொண்டது. களத்திலிருந்த முப்பது பணியாளரும் இவனையே அமைச்சராகப் பார்த்து வரவேற்று ஆரவாரப்பட்டனர். எல்லோருடனும் இயல்பாகப் பழகி அன்பாக அவரவருக்குரிய வேலைகளைப் பணித்துத் தானும் ஒரு பணியாளென இணைந்து கொண்டான்.

அந்தப் பிரதேசமெங்கணும் பதாகைகளும், மாவிலை தோரணங் களும், கட்சிக் கொடிகளுமாக மின்அலங்கார விளக்கொளியில் மின்ன இனி மேடை அலங்கரிப்பு. நேரம் சரியாக 10.30 மணி தேவகி கட்டித் தந்த தோசையின் ஞாபகம்வர அவன் தண்ணீர் போத்தலோடு இந்திய அரசின் சிறிய வீட்டு விறாந்தையில் முதன்மை விருந்தினரானான்.

சேர்த்துக் கொண்ட பெயர்களில் மோகனின் பெயர் இடம்பெறவில்லை. எந்தப் போட்டியானாலும், எந்தவொரு விழாவானாலும், நிகழ்வானாலும் அவனை ஒதுக்கியே வைத்தது கல்லூரிச் சமூகம். அவன் தனிமைப்பட தனிமைப்பட அவன் குழப்படிகள் இன்னுமின்னும் கூடிக்கொண்டு போக தண்டனைகளும் அதிகமானது. அதனால் தண்டனை கூட அவனுக்குத் துரும்பானது. புலமைப்பரிசில் பரீட்சையில் வெறும் 70 புள்ளிகள் மட்டுமே பெற்றான். அவன் எப்போதும் கடைசி வாங்கிலேதான் அமர்வான். இதனை அவதானித்த ஆசிரியர்கள் அனைவரும் பின்வாங்கான் எந்தக் காரியம் செய்யவும் பின்வாங்கான் எனத் தமக்குள் பேசிக்கொண்டனர். பக்கத்து வாங்கு மாணவனின் அவித்த முட்டையை யாரும் பாக்கா வண்ணம் அமுக்குவான், பெண்பிள்ளைகளின் சட்டைக்கு மைதெளிப்பான், ஆசிரியரின் கதிரைக் காலை உடைத்துவைத்து அவர் விழுவதைப் பார்த்து ரசிப்பான், மரம், செடி, கொடி தாவித்திரிந்து அழிப்பான், கல்லெடுத்து கல்லூரியின் யன்னல் கண்ணாடியைப் பதம் பார்ப்பான். எல்லாமே அவன் மனம் போனபடி தான்.

பாடவேளை மணியடிப்பது போல பருவங்கள் மாற பதினாறு வயதில் மோகன் ஓ.எல் மாணவன் என காலம் பிரகடனப்படுத்தியது.

பருவ மாற்றத்தில் அவன் திக்குமுக்காட காதல் கால்வாயில் கரைபுரண்டது அவன் உள்ளம். வகுப்பில் படுசுட்டிப் பெண் தாரணி. அவளுக்கு இவன்தான் காவலன். வீட்டிலிருந்து கல்லூரி, ரியூஷன் என்று அவனின் ஒருதலைக் காதல் இரண்டு சில்லு சைக்கிளில் தினம்தினம் காவல் சவாரி தான். தாரணி மசியவேயில்லை. சீ சீ..... இந்தப் பழம் புளிக்கும் என்று அவன் மறக்கவும் இல்லை. மண்றாடினான், மிரட்டினான், தவம்கிடந்தான் எதுவும் கைகூடவில்லை. மதில்களும், மரங்களும் அவளைப் பற்றிய வசைவரிகளைச் சுமக்க கழுத்தில் சுருக்கிட்டு அவள் தன் அறையின் கப்பில் சுமையாகத் தொங்கினாள். ஆயினும் அவள் மோகனைப் பற்றி ஒரு குறிப்பும் எழுதவில்லை. உலகத்திற்கே தெரிந்த விடயம், ஆனால் ஊரே வாய் மூடிக்கிடந்தது. பொலீசார் மோகனை அழைத்து விசாரித்ததோடு சரி. ஊரவர் அனைவர் வாய்களும் ஏன்? ஏன்? ஏன்? என்று பல கேள்விகள்.

முதன்மை விருந்தினர், கௌரவ விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் என்ற ஒழுங்கிலே மேடையிலே ஆசனங்களை ஒழுங்குபடுத்துதல், ஆசனங்களுக்கு இலக்கமிடல், அதிதிகளின் வருகை, ஆலாத்தி, வரவேற்பு, விளக்கேற்றல், கொடியேற்றல், உரைகள், கலை நிகழ்வுகள், புதியவீட்டுப் பிரவேசம், துறப்புக்கள் வழங்கல் என நிகழ்ச்சிகள் ஒரு ஒழுங்கிலே மோகனின் மூளையில் அடுக்கப்பட அவன் விரல்கள் அடிக்கடி கைபேசியின் பட்டன்களை அழுத்திக் கொண்டன. நேரம் சரியாக 12.00 மணி. ஆங்கில தேதியில் அடுத்த நாள் ஆயினும் சூரியனின் விடியலில் தானே அனைவரின் எழுச்சியும். எல்லா ஒழுங்கும் சரி, மோகன் சேர். நீங்க வீட்டபோய்ற்று நாளை வாங்க........!!

"இல்லலலல்ல........ நான் இனி வீட்ட போகத்தேவல. நாளை ஈவினிங்போனா போதும். இந்த பங்ஷன் நல்லபடி முடிஞ்சா சரி" என்று கூறியபடி மேடையின் ஓரத்திலேயே சாய்ந்து உறங்கிவிட்டான்.

நேரம் சரியாக 5.00 மணி. நேரடி அஞ்சல் சாதனங்களுடன் பதினெட்டுச் சில்லு வாகனங்கள் அந்தப் பகுதியை வந்தடைந்த சத்தத்தில் எழுந்தவன் அவர்களைக் கைலாகு கொடுத்து வரவேற்று, நிகழ்ச்சி ஒழுங்குகளைப் பகிர்ந்து கொண்டான். நித்திய கடமைகள் முடித்துக் களமிறங்கினான். அரங்கு எங்கனும் மக்கள்கூட, காவல்கள் பெருக வாகனங்களின் வருகையோடு வாண வேடிக்கைகள் எட்டுத் திக்கும் ஒளியோடு இடியென முழங்க வந்திறங்கிய அமைச்சரும் பட்டாளங்களும் பான்ட்வாத்திய இசையோடு வருகைதர கிராமம் களைகட்டத் தொடங்கியது. தேநீர், சிற்றுண்டி, சாப்பாடு, கூல் என்று மோகன் சுழன்றுகொண்டே எல்லோரையும் வரவேற்று உபசரித்து, கடமைகளைச்சுட்டி தன் ஆளுமையை அரங்கேற்றினான். அரங்கில் பேசிய அனைவரும் அந்த விழாவின் நேர்த்தி, சிறப்பு, ஒழுங்கமைப்பு பெருமைபற்றிப் பேசி மோகனுக்கு புகழ்மாலை சூட்டிக் கொண்டிருந்தனர்.

கேள்விகள் பல அவனைக் குடையத் தொடங்க பக்குவ நிலையின் முதற்படியில் தெளிவு பெற்றான் மோகன். ஓ.எல் பரீட்சையில் சகல பாடங்களிலும் ஓரளவில் சித்தியெய்தி அனைவரையும் வியக்க வைத்தான். இவன் எப்படி?!!.. அதுவும் ஓ.எல்....... குதிரை ஓடினானோ!! அணு உலையொன்று அடங்கிய அமைதி மோகனிடம். குறும்பும், விளையாட்டும் குடிபெயர்ந்து விட்டது. அமைதியும், அடக்கமும் பற்றிக் கொள்ள அவன் புதுமனிதனானான்.

எல்லோருக்கும் ஆச்சரியம். புலி பதுங்குவது பாய்வதற்கோ என எண்ணினர். ஏ.எல். பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று அசத்தி பெற்றோருக்கும், கல்லூரிக்கும், ஊருக்கும் பெருமை சேர்த்தான். ஊரே அவனை உள்ளங்கையில் வைத்துக் கொண்டாடியது. மோகனின் கண்கள் பனித்தன. ஆனந்தக்கண்ணீர் என ஊரவர் எண்ணினர். அது தாரணிக்கான அஞ்சலிக் கண்ணீர் என்பது அவனுக்கு மட்டுமே தெரிந்த மனத்தின் வெளிப்பாடு.

பரிசில்களோடும், பாராட்டுக்களோடும் பல்கலைக்கழகம் புகுந்தான். கல்வி ஒரு கண் குடும்பம் மறுகண் என அவன் பல்கலைக் காலம் செல்லும் வேளையில் பல காதல்பூக்கள் அவனுக்காக மலர்ந்தன. அவன் ஒன்றையும் பாராட்டாமல் தன் கவனம் முழுவதையும் படிப்பில் செலுத்தி மற்றெல்லா விடயத்தையும் தூரத்தில் வைத்தான்.

"ஏன்ரா!! மச்சி....... நல்ல பிகரெல்லாம் மாட்டுது. நீ என்னண்டா விஸ்வாமித்திரராட்டம் ரம்பையோ, மேனகையோ வருவாளெண்டு தவம் கிடக்கிறா போல...... இது எங்கட சீசன்ரா மச்சி...... பாசவுட் பண்ணினா உடன வேலை. பிறகென்ன கலியாணம் தானே..... இப்பவே ஒரு பிகர கொழுவு மச்சி....."

சக பாடிகளின் பேச்சிலும் அவன் மயங்கவில்லை. சூடுகண்டது பூனையல்ல, இது புலி. நேசரி முதல் ஓ.எல் வரை கலக்கிய புலி இப்போ பசு போல சாதுவானதன் பின்னணி?!! சிறந்த பெறுபேறும், பதக்கமும், கலாநிதிப் பட்டமும் பெற்று தந்தை தாயுடன் சகோதரிகளுமாக நின்று எடுத்த புகைப்படம் இப்போ அவர்கள் வீட்டுச் சுவரை அலங்கரித்தது.

சூட்டிக்கொண்ட எண்களின் ஒழுங்கின்படி உரிமையாளர் அனைவரும் வீட்டின் துறப்புக்களை அமைச்சரின் கைகளினால் பெற்றுக் கொண்டனர். எல்லோரது கரகோஷங்களும் வானைப்பிளக்க வைபவம் இனிதே நிறைவுறும் வேளையில் மோகனை இறுகத் தழுவிக்கொண்டார் அமைச்சர்.

வெறிகுட் மை சண்!! வண்டர்புல் வேக் அண்ட் அரேஞ்மண்ட்.... வெறி பைன்.....

அமைச்சர் இராமனா? ஹனுமனா? பாராட்டில் திளைத்த மோகனுக்கு இப்போதும் கண்கள் பனித்தன. யாரும் அறியாத அந்தக் கண்ணீர் தாரணிக்குக் காணிக்கையானது.

எல்லாம் சிறப்புற நிறைவடைய ஒழுங்கமைத்த பணிகளை பார்த்துப்பார்த்து மீண்டும் பழைய நிலையில் கிராமத்தை விட்டு வெளியேறும் வேளை அத்தனை வீட்டுக்காரரும் உறவினர் ஒருவனைப் பிரியும் வேதனையில் அவன் கரங்களைப் பற்றி ஆசுவாசப்பட்டனர். மக்கள் சேவை மகேசன் சேவை என்பார்கள். இப்போ அனைவர் வாழ்விலும் மோகன் கடவுளாக இந்திய காந்தீய கொள்கைக்கு இவன் சொந்தக்காரனாக எல்லோரிடமும் விடைபெற்றான். வசந்தகிராமம் அவனை வழியனுப்ப சைட் கண்ணாடியில் அவர்களோடு கிராமமும் மறைந்து போனது. சீரணித்தாயின் திருக்கோலத்தைத் தரிசித்து சண்டிலிப்பாயிலுள்ள தன் வீட்டிற்கு விரைந்தான்.

அப்பா! எனக்கு என்ன கொண்ணந்தனி? என்ற ஒன்றரை வயது சஹானாவும், அம்மா எனக்கு அடிச்சவா! என்ற நாலுவயது

கௌதமும், அப்பா நாளைக்கு ஸ்கூலுக்கு றோயிங்புக் கொண்டு போவேணும்! என்ற அனோஜனும் அவனைச் சூழ்ந்து கொள்ள அடுக்களையிலிருந்து அம்பென வந்தாள் தேவகி.

அப்பா களைச்சுப்போய் வந்திருப்பார் அப்பா முதல்ல குளிச்சு சாப்பிடட்டும் அப்புறமா எல்லாம் கதைக்கலாம். நீங்கபோய் ரீ.வீ பாருங்கோ.

வீட்டுச் சுவரில் தொங்கிய தந்தையின் படத்திற்கு மாலை சூட்டி, வேலைக்கான நியமனக் கடிதத்தையும் வைத்து மண்டியிட்டு வணங்கினான். காலம் யாருக்காகவும் காத்திருக்காது. காலனும் அப்படித்தான். தந்தையை அழைத்துவிட்டான். பக்குவ நிலையின் இரண்டாம் படியில் அவன். ஓர் உறவின் இழப்பும் ஏனைய உறவுகளின் பொறுப்பும் அவனைப் பக்குவப்படுத்தியதில் ஆச்சரியமொன்றுமில்லை. வேலை ஒருபுறம், வீட்டுச்சுமை ஒருபுறமாக உழன்று திரிந்து ஓடியாடி மூன்று சகோதரிகளையும் கரை சேர்த்து ஊரிலே ஒரு கண்ணியமானவனாக உயர்வு பெற்று எல்லோருக்கும் உதவும் அபயக்கரமாக அவன் பணிகள் நீண்டுசென்றன. தொழில் என்பது கடமை மட்டுமல்ல, அதையும் தாண்டி ஈடுபாடு, விசுவாசம், சேவை, நேர்த்தி என பல கோணங்களில் பார்க்கப்படும்போது அது புனிதமானது.

சேவைகளின் விரிவினாலே மோகனுக்கு அமைச்சுடனான நேரடித் தொடர்பு, அழைப்பு, ஆலோசனை என அவன் பணியிலும் பல ஏற்றங்கள். கலவரத்தில் சிக்கித்தப்பி வந்த மக்களை இடம்பெயர் முகாம் அமைத்து சகலவசதிகளும் செய்து கொடுத்தான், சுனாமியில் சிக்குண்டவர்களை மீட்டு பற்பல உதவிகள் புரிந்தான்.

நிசாப்புயலால் பாதிக்கப் பட்டவர்களைக் காப்பாற்றி வேண்டிய ஒத்துழைப்புக்களைச் செய்தான். விவசாயத்தில் பாதிப்பு என்றாலும் சரி, வீடு தீப்பற்றியது என்றாலும் சரி, விபத்து என்றாலும் சரி, உடனடியாக அந்த இடத்தில் மோகன் நிற்பான். பின்வாங்கான் என அப்போ எல்லோரும் பழித்த சொல் இப்போ அவனின் தாரக மந்திரமாக. இவன் பெருமைகளை உணர்ந்த ராசுமாமா தன் மகள் தேவகியை அவனுக்குத் தாரைவார்த்தார். ஊரே விழாக்கோலம் பூண்டு அவன் மணவிழாவைத் திருவிழாவாக்கியது.

ரீ.வீ.யில் அந்தச் செய்தி கேட்டதும் தேவகிக்குக் கைகால் ஓடவில்லை. தரை அவளை விட்டு நழுவும் உணர்வு. உயிரைத் துச்சமென மதித்து வீரதீர செயல்கள் புரிந்து மக்களுக்குத் தன்னலமற்ற சேவை புரிந்த அரசசேவையிலுள்ளோர்களுக்கு வருடாவருடம் அரசாங்கத்தால் வழங்கப்படும் "வீரதீரசூரிய" என்னும் விருதிற்காக இம்முறை உள்நாட்டு அபிவிருத்தி இடர் முகாமைத்துவ அமைச்சின் வடமாகாண அதிகாரி திரு.சோமசேகரம் மோகன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவருக்கான விருது எதிர்வரும் நாலாம் திகதி சுதந்திர தினத்தன்று மாலை இடம்பெறும் சிறப்புநிகழ்வில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் வழங்கப்பட வுள்ளது என்பதுதான் அந்தச் செய்தி.

நான்காவது வரிசையில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் குடும்பசகிதமாக மோகன் அமர்ந்திருக்க அவன் சிந்தை சிறகடித்தது. நேசரி முதல் அறிவு தெளியும் வரையில் அவன் செய்த குழப்படிகள், மற்றவர்களைக் கஷ்டப்படுத்திய தீய செயல்கள், மனங்களைப் புண்படுத்திய காரியங்கள், ஏற்படுத்திய இடர்கள் - இவை எல்லாவற்றிற்கும் மேலாக தன்னுடைய முரட்டுச்

சுபாவம் தாரணியைத் தற்கொலை செய்ய வைத்தது. அதேவேளை அவனை அவள் காட்டிக் கொடுக்கவில்லை என எல்லாச் சம்பவங்களையும் ஒரு நிமிடம் எண்ணிப் பார்க்கின்றான். அவனுக்குக் கற்பித்த ஆசிரிய ஆசான்களும், ஊர்ப் பெரியவர்கள் சிலரும் விசேட அனுமதிபெற்று விழாவுக்கு வந்திருந்தனர். நேரம் சரியாக 7.00 மணி தேசியகீதம் இசைக்க மோகனின் பெயர் அழைக்கப்பட மேடையில் விருதுபெறும் சமயம் அவன் கண்கள் பனிக்க, அனைவர் கண்களிலும் ஆனந்தக்கண்ணீர். கண்ணீரில் எத்தனை எத்தனை சம்பவங்கள் காவியமாகியது. ஊறுகாயில் ஓர் பக்குவம். உயிர் நிலையில் உணர்வு பக்குவம். மனிதன் பக்குவமாக வாழ உறவுகளின் இழப்புக்கள் ஒருவனைப் பதப்படுத்துகின்றன. பக்குவத்தின் மூன்றாம் படியில் மோகன் நிலைத்து நின்று இனி உலகை ஆளுவான்.

■■■

# குறிப்புகளுக்காக

# குறிப்புகளுக்காக



ஆரவாரமில்லாத அமைதியான ஒருவர் பவாக் குருக்கள். ஈழத்தில் மட்டுமன்றி உலக நாடுகள் பலவற்றுக்கும் தொழில் நிமித்தம் சென்று வருபவர். பல இன மக்களை, பல்வேறு சமய சமூகத்தவர்களை கண்டறிந்தவர். ஓய்வு நேரங்களில் அவருள் உறங்கிக் கொண்டிருக்கும் எழுத்தாளன் விழித்து உலாவரும் தருணங்களில் அவற்றைச் சிறுகதைகளாக வடித்துள்ளார். ஜனரஞ்சகமான கதைகளுடன் அறிவியல் சார்ந்தவையாகவும் எழுதியுள்ளார். சில கதைகள் வார சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன.

ஓர் ஆன்மீகவாதி, குருக்கள் எழுத்தாளனாக வருவது பெருமைக்குரிய விடயம். பலருக்கும் தெரிந்தவராயினும் ஓர் எழுத்தாளனாக அவர் இந்நூல் மூலம் அறிமுகமாகின்றார். இப்படி ஓர் நூல் வெளிவருவது தமிழுக்கும், எமது ஊருக்கும் பெருமை தருவதாகும்.

அவரது முயற்சி வளர்க! வாழ்க வளமுடன்!

கலாபூஷணம் கே.எஸ்.ஆனந்தன்

சாத்வீகன் கணணி அச்சகம், இணுவில். 0094 021 224 1781